# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN



"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால்
என் பிதா மகிமைப்படுவார்,
எனக்கும் சீஷராயிருப்பீர்கள்"
யோவான் 15:8

## THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG


July - August 2024
Volume : 64

ஆண்டு சந்தா ₹120/-
Issue : 4

## பாளையங்கோட்டை மண்டலம், சீவலப்பேரி ஏஜி சபை பிரதிஷ்டை









## திருவொற்றியூர் டுனாமிஸ் ஏஜி சபை விரிவாக்க பிரதிஷ்டை ஆராதனை








## கீரனூர் ஏஜி சபை பிரதிஷ்டை





ஆசிரியரிடமிருந்து........!



# மிகுந்த கனிகளைத் தரும் கிறிஸ்தவன்

"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (யோவான் 15:8).

கிறிஸ்துவுக்குள் அன்பான பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

ஒவ்வொரு கிறிஸ்தவனும் கனிகொடுக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். நாம் கனிகொடுக்கவே தேவன் நம்மை தெரிந்துக்கொண்டு ஏற்படுத்தி இருக்கிறார். ஒரு நாள் இயேசு கிறிஸ்து பசியாயிருந்தபோது இலைகள் நிறைந்த அத்திமரத்தை கண்டு அதனருகே சென்றார். இலைகள் நிறைந்த அத்திமரத்தில் கனிகள் ஒன்றும் இல்லாததை கண்ட இயேசு அந்த அத்திமரத்தை சபித்ததை நாம் வேதத்தில் காணலாம் (மத்.21:19). நாம் கிறிஸ்தவர்கள் என்ற போர்வையில் கனிகள் இல்லாமல் இலைகளால் நம்மை அலங்கரித்துக்கொண்டு இருக்கிறோம் என்றால் நாமும் சபிக்கப்பட்ட அத்திமரத்திற்கு ஒப்பானவர்களே. தேவன் நம்மில் கனியை எதிர்பார்க்கிறவராய் ஒவ்வொரு வருடங்களையும் நம்முடைய ஆயுசு காலத்தில் கூட்டிக்கொடுக்கிறார். தேவனின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற, கனி கொடுக்கிற கிறிஸ்தவ வாழ்விற்கு நம்மை அர்ப்பணிப்போம். கனி கொடுத்தலை குறித்து வேதம் கூறும் காரியங்களை தியானிப்போம்.

## 1. கனி கொடுத்தல் என்றால் என்ன?
## The PROOF of Bearing Fruit

கனி கொடுத்தல் என்றால் என்ன, கனி கொடுக்கும் கிறிஸ்தவனின் அடையாளங்கள் என்ன என்பதற்கு வேதாகமம் சில பதில்களை நமக்குத் தருகின்றது. **முதலாவது,** நமது நற்குணங்கள் கனிகளுக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது. ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா.5:22,23). மேலும் 2 பேதுரு 1:5-8 வசனங்களில் சில குணங்கள் கூறப்பட்டுள்ளன. இத்தகைய நற்குணங்கள் நமக்குள் காணப்படுமானால் நாம் கனி கொடுக்கிறோம் என்று அர்த்தம். **இரண்டாவதாக,** நமது நற்கிரியைகள் கனி கொடுத்தலுக்கு ஒப்பாக இருக்கிறது. 'சகலவித நற்கிரியைகளாகிய கனிகளைத் தந்து' (கொலோ.1:10) என்று வேதம்கூறுகிறது. நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி நற்கிரியைகளைச் செய்யப்பழகட்டும் என்று பவுல் கூறுகிறார் (தீத்து 3:14). **மூன்றாவதாக,** நற்செய்தி அறிவித்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது கனி தருவதாகும் (யோவான்:15:16; நீதி.11:30; ரோமர் 1:13). ஆகவே நற்குணங்கள், நற்கிரியைகள், நற்செய்தி அறிவித்தல் ஆகிய காரியங்கள் நம்மில் காணப்படும்போது தான் நாம் கனிதரும் கிறிஸ்தவர்களாக இருக்க முடியும்.

## 2. கனி கொடுத்தலின் நோக்கம் என்ன?
## The PURPOSE of Bearing Fruit

நாம் ஏன் கனி கொடுக்க வேண்டும் என்பதற்கு வேதாகமம் நமக்குத் தெளிவான பதில் கொடுக்கிறது. **முதலாவது,** கனி கொடுத்தல் தேவனுக்கு மகிமையைக்கொண்டு வருகிறது. இயேசு சொன்னார் நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார் (யோவான் 15:16). **இரண்டாவதாக,** நாம் கனி கொடுக்கும்படியாக தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம் (யோவான் 15:16). நாம் ஒரு மரத்தை நட்ட பின் அதில் கனியை எதிர்ப்பார்ப்பது போல தேவனும் நம்மில் கனியை எதிர்பார்க்கிறார் (லூக்கா 13:6-9). கனி கொடாவிட்டால் தேவனுடைய தண்டனை நம்மேல் வரும் (யோவான் 15:2,6). **மூன்றாவதாக,** ஒரு கிறிஸ்தவனை அடையாளம் கண்டுகொள்ள கனி அவசியம். எந்த மரமும் கனியினால் அறியப்படுவதுபோல, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய கனியினால் தான் அறியப்படுவான் (மத்தேயு 7:20;12:33).

## 3. கனிகள் கொடுக்க என்ன செய்ய வேண்டும்?
## The PRECONDITIONS for Bearing Fruit

நாம் மிகுந்த கனிகள் கொடுக்க கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்ற வேண்டும்.

1. **கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும்.** ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். (யோவான் 15:5) என் இயேசு சொன்னார். யோவான் 15:1-10 வசனங்களில் நிலைத்திருத்தல் என்ற வார்த்தை 10 முறை வருகிறது. நிலைத்திருத்தல் (Abiding) என்றால் தேவனோடு நெருங்கிய பிரியாத உறவு கொள்ளுதலாகும். ஒரு செடி கொடியோடு ஒட்டிக் கொண்டிருக்கும்போது செடியிலிருந்து சத்தும் சாரமும் கொடிக்கு சென்று பலனளிப்பது போல, நாமும் இயேசுவோடு ஐக்கியத்தில் நிலைத்திருக்கும்போது, பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும் என்பது போல, நாமும் அவருடைய சாயலையும் குணங்களையும் வெளிப்படுத்தி கனியுள்ள வாழ்வு வாழ முடியும்.

2. **வேதத்தை தியானித்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.** கர்த்தருடைய வேதத்தில் இரவும், பகலும் தியானமாய் இருக்கிற மனுஷன், நீர்க்கால் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைக் கொடுக்கும் மரத்தைப் போல் இருப்பான் என்று வேதம் கூறுகிறது (சங்.1:2,3). நாம் தினந்தோறும் எவ்வளவோ வேத வசனங்களை, செய்திகளை கேட்கிறோம். எத்தனை வசனங்கள் நம் இருதயத்திற்குள் செல்கின்றன? எத்தனை வசனங்களுக்கு நாம் கீழ்படிகிறோம்? சற்று சிந்தித்து பார்ப்போம். வேதம் கூறுகிறது நல்ல நிலத்தில் விழுந்த விதை சிலது நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தந்தது. நிலம் நம்முடைய இருதயம். விதை தேவனுடைய வசனம். நல்ல நிலமாகிய இருதயத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான். நாம் வசனத்தை கேட்கிறதால் தியானிக்கிறதால் அல்ல; அதனை உணர்ந்து நம் இருதயம் கீழ்படியும்போது நல்ல கனிகளை கொடுக்க இயலும். வேதம் கூறுகிறது எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். (எபிரெயர் 6:7). பூமி எப்படியாய் தன்மேல் விழுகிற மழை

நீரை உறிஞ்சிகிறதோ அதே போல வேத வசனங்களை நம்முடைய இருதயம் உறிஞ்சி ஏற்றுக்கொண்டு, அதனை உணர்ந்து அதின்படி வாழும்போது நாமும் கனிகொடுக்கிறவர்களாய் மட்டுமல்ல தேவனுடைய ஆசீர்வாதத்தையும் பெறுகிறோம்.

3. **ஆவியினால் நிறைந்திருக்க வேண்டும்.** ஆவியின் கனி கொடுக்க ஆவியானவரின் உதவி மிகவும் அவசியம் (எபே.5:18; கலா.5:22,23). ஆகவே ஒவ்வொரு நாளும் ஆவியினால் நிறைந்து, ஆவியானவரால் நடத்தப்பட அர்ப்பணிக்க வேண்டும்.

4. **சுயத்திற்கு மரிக்க வேண்டும்.** வேதம் சொல்லுகிறது. 'கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிடில் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனை/கனிகளைக் கொடுக்கும்' (யோவான் 12:24). மாம்சத்தை தினமும் சிலுவையில் அறைந்து சுயத்திற்கு அனுதினமும் மரித்தால்தான் கனி கொடுக்க முடியும். ஒவ்வொரு மனிதனுக்கும் தன் சொந்த ஆசைகள், விருப்பங்கள், எதிர்கால திட்டங்கள் உண்டு. இந்த ஆசைகளை முக்கியப்படுத்தி அதின்படி தான் வாழுவேன் என்றால் நம்மால் ஆவிக்கேற்றபடி வாழ முடியாது. ஆவியின் கனிகளை கொடுப்பது சுலபமான காரியம் அல்ல. நம்முடைய சொந்த ஆசை விருப்பங்கள் எல்லாவற்றையும் சிலுவையில் அறைந்து, இயேசு கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றும்போது மட்டுமே ஆவியின் கனிகளை கொடுக்க முடியும்.

5. **தேவன் மேல் எப்பொழுதும் நம்பிக்கையும் விசுவாசமும் வேண்டும்.** கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் தப்பாமல் எப்பொழுதும் கனி கொடுக்கிற மரத்தைப் போலிருக்கிறான் என்று வேதம் கூறுகிறது (எரே.17:8). வாழ்வில் துன்பங்கள் உபத்திரவங்கள் வரும் சமயங்களில், ஜீவதண்ணீரண்டையில் நாட்டப்பட்டவனாய் தேவன் மேல் நம்பிக்கையாய் இருந்து அவரில் வேரூன்றி நிலைத்திருப்பவன் எல்லா காலத்திலும் தப்பாமல் கனிகொடுப்பான்.

6. **சபை ஐக்கியம் வேண்டும்.** திருச்சபையிலுள்ள பரிசுத்தவான்களின் ஐக்கியமும், போதனையும் நாம் கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சி அடைவதற்கும், கனிதருவதற்கும் மிகுந்த அவசியம் (அப். 2:42-44).

7. **தேவன் நம்மை சுத்தமாக்க இடமளிக்க வேண்டும்.** கனிகொடுக்கிற கொடி எதுவோ அது அதிகக் கனிகளை கொடுக்கும்படி அதை சுத்தம் பண்ணுகிறார் என்று வேதம் கூறுகிறது (யோவான் 15:3). தேவன் நம்மைத் தம்முடைய வார்த்தையின் மூலமாகவும் (எபி.4:12; யோவான் 15:2). உபத்திரவங்களின் மூலமாகவும் (எபி.12:11; யோபு 33:10) நம்மைப் புடமிட்டுப் பரிசுத்தமாக்க விரும்புகிறார். நாம் இச்சமயங்களில் முறுமுறுக்காமல் அவரைத் துதித்து அவர் தம்முடைய கிரியையை நம் வாழ்வில் நிறைவேற்ற இடமளிக்கும்போது நாம் மிகுந்த கனிகளைக் கொடுப்போம்.

## 4. கனி கொடுக்காவிட்டால் வரும் தண்டனை
## The PUNISHMENT for not Bearing Fruit

"நல்ல கனி கொடாதிருக்கிற மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்" என்று இயேசு கூறின எச்சரிப்பின் தொனி ஒவ்வொரு நாளும் நமக்குள் தொனிக்கட்டும் (மத்.3:10). கனிகளை நாம் கொடாவிட்டால் தேவனுடைய

தண்டனைக்குப் பாத்திரமாக மாறி விடுகிறோம் என்று வேதம் கூறுகிறது (லூக்கா 13:7; யோவான் 15:2,6; மத்.21:19). உலகக் கவலை, சிற்றின்பங்கள், ஐசுவரியத்தின் மயக்கம் (லூக்கா 8:14), துன்மார்க்கரோடு உள்ள ஐக்கியம் (சங்.1:1-3) ஆகியவைகள் நம்மைக் கனியற்றவர்களாக மாற்றுகிறது. பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையை நாம் சீர்தூக்கி பார்ப்போமா? தேவன் நம்மை இரட்சித்து பல வருடங்கள் ஆகிறதல்லவா? நாம் எப்படிப்பட்ட கனிகளை கொடுக்கிறோம்? தாம் தெரிந்துகொண்ட இஸ்ரவேல் ஜனங்களை பார்த்து "நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத்திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன?" என்று தேவன் கேட்டதுபோல இன்று நம்மை பார்த்துக் கேட்கிறார் (எரேமியா 2:21).

ஆகவே தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், இயேசு கிறிஸ்துவில் கொடியைப் போல ஐக்கியப்பட்டு வாழ்ந்து கனி கொடுக்கிறவர்களாய் மாறுவோம். கீழே வேர்பற்றி மேலே கனிகொடுப்போம் (ஏசாயா 37:31). பழுத்த பழங்கள் நிறைந்த மரங்கள் மனிதர்களுக்கு பறவைகளுக்கு என எல்லாருக்கும் உபயோகமாய் இருக்கும். அதுபோல நாமும் ஆவியின் கனிகளால் நிறைந்து தேவனை அறிந்தவர்களுக்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கும் உபயோகமாய் மாறுவோம். நம்முடைய பிதாவானவர் விரும்புகிறபடி நாம் அதிக கனிகளை கொடுத்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம். தேவன் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். உங்கள் ஸ்தல சபை போதகர் மூலமாகவும் பிரதேச பொருளாளருக்கு அனுப்பி வைக்கலாம். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

### ஏ.ஜி. தலைமை அலுவலகம்

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்தரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

### நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484



# இயேசு கிறிஸ்துவின் வருகையும், உலக முடிவும் அதிசீக்கிரம்


**Rev. P.S. ராஜமணி**

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020


பாகம் :2 (... தொடர்ச்சி)

## நிறைவேறிக் கொண்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள்

### 3. அகில உலகிலும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டு வருகிறார் (அப்போஸ்தலர் 2:17-21)

“அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள், உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர்மேலும், ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்” (யோவேல் 2:28,29).

யோவேல் கூறிய தீர்க்கதரிசனம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறிற்று. மாம்சமான யாவர் மேலும் என்ற சொல் கவனத்திற்குரியது. உலகில் எல்லா நாடுகளிலுமுள்ள தேவனுடைய பிள்ளைகள் பரிசுத்த ஆவியை பெற்று வருகிறார்கள்.

பரிசுத்த ஆவி என்றால் பெந்தெகொஸ்தே சபைப் பிரிவினருக்குரியது என்ற கருத்து மாறி இந்த அனுபவம் யாவருக்குமுரியது என்று விசுவாசித்து, எல்லா சபைப் பிரிவுகளை சார்ந்தவர்களும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று வருகிறார்கள். இன்றுள்ள கணக்குப்படி உலகளவில் சுமார் 80 கோடி மக்கள் (800 மில்லியன்) பரிசுத்த ஆவியை பெற்றுள்ளார்கள் என்று கூறப்படுகிறது.

இன்னும் சில ஆண்டுகளில் உலகிலுள்ள மொத்தக் கிறிஸ்தவர்களில் (200 கோடி பேர்) 60 சதவிகிதம் கிறிஸ்தவர்கள் (120 கோடி) பரிசுத்த ஆவியை பெற்றுவிடுவார்கள் என்று நம்பப்படுகிறது.

‘‘...அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது” (அப்போஸ்தலர் 2:38,39).

“பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்” (அப்.1:8).

### 4. விசுவாசத் துரோகம் நேரிடுகிறது (2தெச.2:3,4)

**அமெரிக்காவில் சில ஆண்டுகளுக்கு முன் நடந்த போதகர் கருத்தரங்கு:**

- 10000 போதகர்கள், சபைத்தலைவர்கள் கலந்துகொண்டனர்.
- வேதாகம சத்தியங்களைக் குறித்த பல கேள்விகள் கேட்கப்பட்டன.
- 7441 பேர் மட்டுமே பதிலளித்தனர்.
- அவர்களின் பதில் அதிர்ச்சி தரக்கூடியதாயிருந்தது.

1) இயேசு கிறிஸ்து சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுந்தாரா? என்ற கேள்விக்கு, மெத்தடிஸ் சபை போதகர்களில் 51% பேர், மற்ற சபைப் பிரிவுகளில் சுமார் 30% பேர் இயேசு உயிர்த்தெழவில்லை என்று பதிலளித்தனர்.

2) பரிசுத்த வேதாகமம் பரிசுத்த ஆவியானவரால் எழுதப்படவில்லை என்று, மெத்தடிஸ் சபைப் போதகரில் 82%, பிரஸ்பிட்டேரியன் 81%, லுத்தரன் 57% பதிலளித்தனர்.

3) இயேசுவின் கன்னிப்பிறப்பை மறுதலித்தவர்கள். மெத்தடிஸ் 60%, பாப்டிஸ்ட் 44%, பிரஸ்பிட்டேரியன் 49%, லுத்தரன் 19.7%.

4) **இங்கிலாந்து-எடின்பரோ பிஷப் ரிச்சர்ட் 1995ல் கூறினார்:** மனிதன் விபச்சாரத்தில் ஈடுபடும் தன்மையுடன் படைக்கப்பட்டுள்ளான். அவனில் இருக்கும் விபச்சார உணர்வு இயற்கையானது. அதை கண்டிக்கக்கூடாது.

5) **இங்கிலாந்து சபை:** இங்கிலாந்து சபை 1995ல் திருமணம் ஆகாமல் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது தவறல்ல. ஆணோடு ஆண், பெண்ணோடு பெண் பாலுறவில் ஈடுபடுவது தவறல்ல என்று அறிக்கையிட்டது.

**பார்னா என்ற தனிப்பட்ட ஆய்வுக்குழு நடத்தின ஆய்வின் அறிக்கை:**

10000 பேரிடமிருந்து பெற்ற பதில்கள்:

84% நாங்கள் மதக்கோட்பாட்டில் நம்பிக்கையுடையவர்கள். நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று கூறினர். அவர்களின் கருத்து,

1) திருமணமில்லாமல் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழலாம் - 60%

2) கருச்சிதைவு சரிதான் - 45%

3) விபச்சாரம் சரிதான் - 42%

4) ஆணோடு ஆண், பெண்ணோடு பெண் உறவு கொள்ளலாம் - 30%

5) சூதாட்டம் சரிதான் - 60%

6) நிர்வாணப்படங்களைப் பார்க்கலாம் - 38%

போதகர் ஜாங் மெக்டோவெல் என்ற பிரபல எழுத்தாளர் அரிசோனா மாநிலத்தில் பீனிக்ஸ் (PHENIX) நகரில் நடந்த சதர்ன் பாப்திந்து கன்வென்ஷனில் இவ்விதம் கூறினார். உலகின் பிள்ளைகளின் விசுவாச நிலையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

மனந்திரும்பினவர்கள் என்று தங்களை அழைத்த வாலிபர்களிடம் எடுத்த ஆய்வு:

- 1991ல் 52% சதவிகிதம் பேர் வேதாகமத்தில் முழு சத்தியமும் இல்லை என்று கூறினர்.
- 1994ல் 62% சதவிகிதம் பேர் இந்த கருத்துடையவர்களாக இருந்தனர்.
- 1999ல் 78% சதவிகிதம் பேர் வேதாகமத்தில் முழு சத்தியமும் இல்லை என்று கூறினர்.
- 2002ல் 91% சதவிகிதம் பேர் இந்தக் கருத்துடையவர்களாக இருந்தனர்.

எனவே மனந்திரும்பியுள்ளேன் என்று கூறும் வாலிபர்களில் 91% சதவிகிதம் பேர் வேதாகமத்தில் முழு நம்பிக்கை வைக்கவில்லை.

**அனைத்து கிறிஸ்தவ சபைகளின் இயக்கம் *(Ecumenical Movement)***

அகில உலக சபைகளின் சங்கத்தையும் ***(World council of church)*** ரோமன்

கத்தோலிக்க சபையையும் இணைக்கும் பாலமாக செயல்படும். இந்த இயக்கம் மற்ற மதங்களோடு கிறிஸ்தவத்தையும் இணைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது. எம்மதமும் சம்மதம் என்பதே இதன் கோட்பாடு. முழு உலகத்திற்கும் ஒரே மதம் போதும் என்ற கருத்தில் செயல்படுகிறது.

**1993ல் நடந்த அகில உலக சபைகளின் சங்க மாநாடு**

அகில உலக சபைகளின் சங்கம் அமெரிக்காவில், மினிசோட்டா மாநிலத்தில் மினியாப்போலிஸ் நகரில் ஓர் மாநாடு நடத்தியது. இந்த மாநாட்டில் நடந்த கூத்து:

**சோபியா – உலகை சிருஷ்டித்த தேவதை**


நீதிமொழிகள் 1-9 அதிகாரங்கள், மத்தேயு 11; லூக்கா 11:49; 1 கொரிந்தியர் 1-2 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள தேவஞானம் (சோபியா) என்பது ஒரு பெண் தேவதை. அவளால்தான் உலகம் சிருஷ்டிக்கப்பட்டது. இயேசுவும், அவளும் சேர்ந்து உலகை சிருஷ்டித்தனர் என்று வேத பண்டிதர்கள் என்று அழைக்கப்பட்ட ஆண்களும், பெண்களும் பேசினர்.

இயேசு வாழ்வு முறையை நமக்குப் போதிக்க வந்தார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது பாவங்களை கழுவும் என்பதும், இயேசுவின் சிலுவைக்குக் கீழ் சென்று இரத்தத்தால் கழுவப்பட வேண்டும் என்பதெல்லாம் கீழ்த்தரமான கருத்து, ஏற்றுக்கொள்ள முடியாதது என்று இங்கே பேசப்பட்டது.

**ஐக்கிய மதங்கள் *(United Religions)***

1997 ஜூன் 23ல் அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிஸ்கோ ஸ்டேன்போர்ட் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ, கத்தோலிக்க, புத்தமத, இஸ்லாம் மத, யூத மத, சீக்கிய மத தலைவர்கள் இந்து மற்றும் பிற மதத் தலைவர்களாக சுமார் 200 பேர் கூடினர். இவர்கள் கூடினதின் நோக்கம் ஐக்கிய மத அமைப்பை உருவாக்குவதே. அந்தி கிறிஸ்துவின் திட்டம் இதுதான். ஒரே உலக ஆளுகை, ஒரே உலக நாணயம், ஒரே உலக மதம்.

தொடரும்...




## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# புத்தியுள்ள ஸ்திரீ


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த இதழில் சகோதரிகளைக் குறித்து தியானிக்க விரும்புகிறேன். தேவன் உருவாக்கிய முதல் ஸ்தாபனம் குடும்பம் ஆகும். ஏதேன் தோட்டத்தில் இருந்தே சாத்தான் குடும்பத்தை அழிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறான். ஆனால், தேவன் விசேஷித்த திட்டம் ஒன்றை ஏதேனில் உருவாக்கி, இயேசு கிறிஸ்துவில் அதை நிறைவேற்றினார். அதன் மூலம் சாத்தானை மேற்கொள்ளும் அதிகாரத்தை நாம் பெற்றிருக்கிறோம். சகோதரிகளாகிய நாம் குடும்பத்தைக் கட்டுவதில் அதிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். ஏனென்றால், ஆதிமுதல் சாத்தான் பெண்களாகிய நம்மையே குறி வைத்துத் தாக்கி கொண்டிருக்கிறான். தேவ ஞானத்தைப் பெற்றவர்களாய் சாத்தானின் சதித் திட்டங்களை முறியடிக்க தேவ பெலத்தோடு எழும்புவோம். நம்முடைய வீடுகளை கீழ்காணும் வீடுகளாக கட்டுவோமானால் புத்தியுள்ள ஸ்திரீகளாய் பக்தியுள்ள சந்ததிகளை தேவ திட்டப்படி உருவாக்குகிறவர்களாக காணப்படுவோம்.

### பக்தியுள்ள குடும்பம்

நீதிமொழிகள் 14:1-ல், "புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்" என்று வாசிக்கிறோம். செங்கல்லினாலும் சிமெண்ட்னாலும் கட்டப்படும் வீடு அல்ல. பக்தியுள்ள வீடாக, சமாதானத்தின் வீடாக, பரிசுத்த ஆவியானவரால் நிறைந்த வீடாக கட்ட வேண்டும். ஓபேத் ஏதோமின் வீட்டில் கர்த்தருடைய பெட்டி இருந்ததினால், அவன் வீட்டைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக என்று யாத்.25:8-ல் வாசிக்கிறோம். தேவன் வாசம்பண்ணத்தக்க சூழ்நிலையை நம் குடும்பத்தில் உருவாக்க வேண்டும். கொர்நேலியு, தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்கு பயந்தவனுமாயிருந்தான் என்றும், மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான் என்றும் அப்போஸ்தலர் 10:2-ல், வாசிக்கிறோம். ஸ்திரீகளாகிய நாம், நம் வீட்டில் உள்ள அனைவரும் பக்தியுள்ளவர்களாகவும், ஜெபிக்கிறவர்களாகவும் இருக்கும்படி ஜெபித்து பிரயாசம் எடுக்க வேண்டும். கர்த்தருக்கு பயப்படுவதினால் வரும் ஆசீர்வாதங்களை சங்கீதம் 128 ல் வாசிக்கிறோம்.

கடைசிநாட்களில் மனுஷர்கள், "தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" என்று 2 தீமோத்தேயு 3:1-5-ல், வாசிக்கிறோம். அதே வசனங்களில் தற்பிரியராயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்படியாதவர்களாயும் இருப்பார்கள் என்று வாசிக்கிறோம். அன்னாள் தன் மகனாகிய சாமுவேலை, அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனை கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் (1 சாமு.1:27,28) என்று ஒப்புக்கொடுத்தது போல

ஸ்திரீகளாகிய நாமும் நம் பிள்ளைகளை அனுதினமும் கர்த்தருடைய பாதத்தில் சமர்ப்பித்து ஜெபிக்க வேண்டும். இந்த கடைசி காலத்தின் கொடிய சூழ்நிலையின்று நம் பிள்ளைகள் தப்பித்துக்கொள்ளும்படி விழிப்போடு இருந்து நாம் ஜெபிக்க வேண்டும். எருசலேம் குமாரத்திகளே... உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்று சிலுவையை சுமந்து சென்ற இயேசுவானவர் கூறிய ஆலோசனைப்படி நம்முடையப் பிள்ளைகளுக்காக அழுது ஜெபிக்கிறவர்களாக மாற வேண்டும்.

ஸ்திரீகளாகிய நாம் கற்றுக் கொடுக்கிறவர்களாகவும் மாதிரியான வாழ்வு வாழ்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். தீமோத்தேயுவின் தாயானவள் இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை சிறுவயது முதல் அவனுக்கு கற்றுக் கொடுத்திருந்தாள் என்று 2 தீமோத்தேயு 3:15 ல், வாசிக்கிறோம். முன் ஒருபோதும் இல்லாத அளவிற்கு இந்தக் கடைசி நாட்களில் நம் பிள்ளைகள் சிறுவயது முதலே இணைய தளங்கள் மற்றும் சமூக வலைதளங்களின் மூலம் பாதிக்கப்பட்டும் அடிமைப்பட்டும் இருக்கின்றார்கள். ஸ்திரீகளாகிய நாம் நம் பிள்ளைகளுக்கு சிறுவயது முதலே பரிசுத்த வேத எழுத்துக்களை கற்றுக் கொடுத்துவிட வேண்டும். தன் தாயாருக்குள்ளும் தன் பாட்டிக்குள்ளும் இருந்த விசுவாசம் தீமோத்தேயுவிற்குள் இருந்தது என்று 2 தீமோத்தேயு 1:5-ல் வாசிக்கிறோம். தங்களுக்குள் இருந்த விசுவாசம் தன் பிள்ளைக்குள்ளும், பேரப்பிள்ளைக்குள்ளும் இருக்கும்படி ஐனிக்கேயாளும், லோவிசாளும் மாதிரியாய் வாழ்ந்தார்கள். நம் வாழ்வும் நம் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும், நம்முடன் வாழ்கிற அனைவருக்கும் மாதிரியாக இருக்க வேண்டும்.

பிள்ளைகள் சரியான தீர்மானம் எடுக்க, நாம் அவர்களை பழக்குவிப்பவர்களாக இருக்க வேண்டும். எபிரெயர் 11:23-25 ல், மோசே , தான் பெரியவனானபோது அநித்தியமான பாவசந்தோஷங்களை அனுபவிப்பதைவிட தேவ பிள்ளைகளோடு துன்பம் அனுபவிப்பதைத் தெரிந்துகொண்டான் என்று வாசிக்கிறோம். மோசே சரியான தீர்மானங்களை எடுக்கும்படி அவன் தாயார் அவனைப் பழக்குவித்திருந்தபடி சகோதரிகளாகிய நாமும் நம்முடையப் பிள்ளைகள் சரியான தீர்மானங்களை எடுக்கக் கூடியவர்களாக அவர்களை வளர்க்க வேண்டும்.

## சமாதானத்தின் வீடு

நம்முடைய வீடு சமாதானத்தின் வீடாக மாற நாம் பிரயாசமெடுக்க வேண்டும். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். தேவனுடைய குமாரத்திகளாய் குடும்பத்தின் சமாதானத்திற்காய் ஜெபிக்கவும் முயற்சி எடுக்கவும் வேண்டும். வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவுமாட்டார், அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை (மத்தேயு 12:19) என்று இயேசுவானவரை குறித்து வேதம் கூறுகிறது. நாமும் கிறிஸ்துவின் இந்த தெய்வீக சுபாவத்தை தரித்துக் கொள்வோம். கவலை இல்லாத வீடாக இருக்க வேண்டும். பிலிப்பியர் 4:6,7-ல், ஒன்றுக்கும் கவலைப்படாமல் என்று வாசிக்கிறோம். 1 பேதுரு 5:7-ல், அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளை எல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் என்று வாசிக்கிறோம். சமாதானப் பிரபுவாகிய இயேசுவின் மீது

நம்முடைய கவலைகளை வைத்துவிட்டு நம்முடைய விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் நம்முடைய இருதயத்தையும் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும். அப்படியே நம்முடைய பிள்ளைகளையும், நம்மால் வழிநடத்தப்படுபவர்களையும் பயிற்றுவிக்க வேண்டும். சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொள்ளும்படி கொலோசெயர் 3:12-ல், நாம் அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம். 14 ஆம் வசனத்தில் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள் என்று வாசிக்கிறோம். 15 ஆம் வசனத்தில், தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது என்று வாசிக்கிறோம்.

## பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட வீடு

இங்கே சகரியா மற்றும் எலிசபெத்தைக் குறித்துப் பார்ப்போம். அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் (லூக்கா 1:6). வீட்டில் குறை இருந்தாலும் ஊழியத்தில் உண்மையாக இருந்தார்கள். ஜெபத்தில் தரித்திருந்தார்கள் (v.13). எலிசபெத் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு தீர்க்கதரிசனம் உரைத்தாள் (v.4). சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு தீர்க்கதரிசனம் உரைத்தார் (v.67). மாதிரியான ஒரு குடும்ப வாழ்வை அவர்கள் வாழ்ந்ததினால் இருவரும் பரிசுத்த ஆவியானவரினால் நிரப்பப்பட்டு இருந்தார்கள். மகனான யோவான் ஸ்நானனும் ஆவியிலே பலங்கொண்டு இருந்தான் (v.80). இப்படிப்பட்ட தூய வாழ்வை வாழும்போது நம் வீட்டில் உள்ள அனைவரும் ஆவியானவரால் நிரப்பப்பட்டிருப்போம். சத்திய ஆவியான அவர் சகல சத்தியத்திற்குள்ளும் போதித்து நடத்துகிறவர். இயேசு கிறிஸ்துவின் போதனைகள் அனைத்தையும் நமக்கு நினைப்பூட்டுகிறவர். துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ண வேண்டும் (எபேசியர் 5:18,19).

ரெபெக்காள், ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள, தன் மகனாகிய யாக்கோபிற்கு தவறான ஆலோசனை கொடுத்ததினால், சகோதரருக்குள் நீண்ட பகை உண்டானதை நாம் அறிவோம். அதே போல் சாராள், ஆகாரைத் திருமணம் செய்துகொள்ளும்படி தன் கணவருக்கு தவறான ஆலோசனைக் கொடுத்ததினால், இன்றைய நாள் வரையிலும் உலகம் மோசமான விளைவுகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றது. ஏரோதியாள் தன் மகளுக்கு தவறான ஆலோசனை கொடுத்ததினால், கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணவந்த யோவான் ஸ்நானகனின் தலை எடுக்கப்பட்டது. அகசியா ராஜாவிற்கு அவன் தாயாகிய அத்தாலியாள் துன்மார்க்கமாய் நடக்க ஆலோசனை கூறினாள் (2 நாளா.22:3). இப்படிப்பட்ட துர் ஆலோசனை கூறும் புத்தியற்ற, பொல்லாத ஸ்திரீகளாக இராமல், புத்தியுள்ளவர்களாக, தேவனுக்கு பயந்தவர்களாக, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்களாக சமாதானமுள்ள வீட்டைக் கட்டி பக்தியும், புத்தியும் உள்ள சந்ததியை கர்த்தரின் மகிமைக்காக, உருவாக்குவோமாக! பரிசுத்த ஆவியானவர் தாமே நம் அனைவருக்கும் தேவையான ஞானத்தையும் பெலத்தையும் அருளிச்செய்வாராக!





# முன்னேறும் சேனை

**Rev.J.சாமுவேல் ஜெபராஜ்**

செயலாளர், ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தமிழ் பிரதேச ஆண்கள் ஐக்கியத்தின் சார்பில் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். தேவ கிருபையால் நமது பிரதேச ஆண்கள் ஐக்கியம் சிறப்பாக வளர்ந்து வருகிறது. எல்லா மண்டலங்களிலும் ஆண்கள் முகாம் ஆசீர்வாதமாக, மிகவும் பயனள்ளதாக மாறி வருகிறது.

கடந்த ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி பிரதேச ஆண்கள் முகாம் வெகு சிறப்பாக நடைபெற்று, சாட்சிகள் ஏராளம் வந்த வண்ணம் உள்ளன. இந்த ஆண்டும் 02.10.2024 அன்று Rev.பால் தங்கையா, Rev.ஆபிரகாம் தாமஸ் அவர்கள் தேவ செய்தி கொடுக்க இருக்கிறார்கள். ஜெபத்தினால் தாங்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**1. சேனைகளின் கர்த்தர் என்பது அவர் நாமம்** (எரே.10:16)

நம்முடைய தேவன் சேனைகளின் கர்த்தர் தேவனுக்கு பல பெயர்கள் வேதத்தில் உள்ளதை நாம் காண முடியும். ஆனால் சேனைகளின் கர்த்தர் என்பது மிக பயங்கரமான ஆளுகை நிறைந்த, எதிர் சேனைகள் கலங்க கூடிய பெயர். எனவே நாம் முன்னேறும் சேனையாய் இருப்பதற்கு காரணம், நம் பொன் அல்ல, நம் திறமை அல்ல, சேனைகளின் கர்த்தர் நம்முடனே இருப்பதால், இதை வாசிக்கிறவர்களே விசுவாசியுங்கள். உங்களுக்கு விரோதமான சேனைகள் சிதறடிக்கப்படும்.

**2. சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்** (ஆகாய் 2:6)

ஒரு அசைவை உண்டாக்குவேன் என சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். இனி வருகிற நாட்களில் புருஷர்கள் மூலமாக பட்டணத்தில், தேசத்தில் ஒரு அசைவை தேவன் உண்டாக்கப் போகிறார்.

பிலிப்பு என்பவன் தெரிந்து கொள்ளப்பட்ட 7 பேரில் ஒரு புருஷன், அப்போஸ்தலன் அல்ல. பந்தி விசாரிப்புக்காக தெரிந்து கொள்ளப்பட்டவன். ஆனால் தேவ ஆவியானவர் சமாரியா பட்டணத்தை அசைக்க அவனைப் பயன்படுத்தினார். மிகுந்த சந்தோஷம் அந்த பட்டணத்தில் உண்டாயிற்று. இதை வாசிக்கிற அன்புக்குரியவர்களே வருகிற காலத்தில் புருஷர்கள் (ஆண்கள்) மூலமாக ஒரு அசைவை தேவன் வைத்திருக்கிறார். நம் பிரதேசத்தில் இந்த ஆண்கள் ஐக்கியத்தின் மூலமாக ஒரு அசைவு வரப்போகிறது.

ஒவ்வொரு புருஷர்களும் பரிசுத்த ஆவியினால், வல்லமையினால், தேவ ஞானத்தால் நிரப்பப்படுவீர்கள். இனி வருகிற நாட்களில் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை தேவன் உங்களை கொண்டு செய்வாராக. ஒரு அசைவு உண்டாவதாக.

**குறிப்பு:**

பிரதேச ஆண்கள் ஐக்கியத்திற்காக, அதன் தலைவர்களுக்காக, பிராந்திய மண்டல பொறுப்பாளர்களுக்காக, ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# வனாந்திரத்தில் இஸ்ரவேலரின் அன்றாட தேவைகள்

வேதாகமத்தில் நாம் எண்ணற்ற அதிசயங்கள் அற்புதங்கள் பற்றிக் காண்கிறோம். அவற்றுள் தலை சிறந்தது மோசேயும் இஸ்ரவேல் மக்களும் நாற்பது வருட காலங்களாக வனாந்தரத்தில் சஞ்சரித்தபோது நிகழ்ந்தவைகளே. ஆனால் நாமோ அதைப்பற்றி வியந்து மகிழாமல், அதை ஏதோ ஒரு அன்றாட நிகழ்வென கருதுகிறோம். பெருந்திரளான இஸ்ரவேலரின் அன்றாட, அவசர, அத்தியாவசிய தேவைகள் எத்தனை, எத்தனையோ? சிந்தித்து பார்க்கவே மலைப்பாக இருக்கிறதல்லவா?

**உணவு** : மோசே கர்த்தருடைய ஜனங்களை அனுதினமும் போஷிக்க வேண்டியதாயிருந்தது. 25 முதல் 30 இலட்சமாகிய மக்களுக்கும் மற்றும் கால்நடைகள், பறவைகளுக்குமான அனுதின உணவு தேவை. அளவிடற்கரியதாகும். பெரிய இராணுவத்தில் போர் வீரர்களுக்கு அன்றாடம் உணவு, உடை, எரிபொருள், குடிநீர் மற்றும் பல தேவைகளைப் பூர்த்திசெய்யும் ஒரு அதிகாரியின் கணப்பின்படி, வனாந்தரத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு மைல் நீளமுள்ள, இரண்டு சரக்கு இரயில்கள் நிரம்பத்தக்கதாக உணவு தேவைப்பட்டது. அதாவது சுமார் 1500 டன் (15 இலட்சம் கிலோ கிராம்) இத்தைய மாபெரும் தேவை கர்த்தரால் அற்புதமாக அருளப்பட்டது.

**சமையல்** : இரண்டாவதாக உணவு சமைக்கத் தேவையான எரிபொருள் (விறகு), அனுதினமும் 4000 டன் (40 இலட்சம் கிலோ கிராம்) அளவு விறகு கட்டைகள் தேவைப்பட்டன. இவைகளும் ஒரு மைல் நீளமுள்ள ஒரு சில சரக்கு இரயில்கள் கொள்ளத்தக்கதானவை.

**தண்ணீர்** : ஒரு நாளில் ஒரு நபருக்கு தேவையான தண்ணீர் சுமார் 19 லிட்டர். இதன்படி பார்த்தால், வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு, ஒரு நாளிற்கு மட்டும் குடிக்கவும், சமைக்கவும், குளிக்கவும், துவைக்கவும் ஏறக்குறைய 11 மில்லியன் கேலன் (14.6 கோடி லிட்டர்) அளவான தண்ணீர் தேவைப்பட்டிருக்க வேண்டும். இவ்வளவு தண்ணீர் சுமார் 1800 மைல் நீளமுள்ள குடிநீர் கேலன்கள் அடங்கிய சரக்கு இரயில் கொள்ளளவானது. வனாந்தரத்தில் ஏரிகள் போன்ற நீர்நிலைகள் இல்லை. ஒரு சில கிணறுகள் மட்டுமே இருந்தன. வனாந்தரம் என்றாலே வறட்சியான இடம்தானே? இப்படியிருக்க வறண்ட வனாந்தரத்தில் இவ்வளவு தண்ணீர் அவர்களுக்கு அனுதினமும் எப்படி கிடைத்தது. கர்த்தராகிய தேவனே அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்தார்.

**இடம்** : அடுத்ததாக ஒரே இரவில் இஸ்ரவேலர் அனைவரும் செங்கடலைக் கடக்க வேண்டியதாய் இருந்தது. குறுகிற வரிசையில் இருவர் பின் இருவராகக் கடக்க முயன்றிருந்தால், 800 மைல் நீளமான வரிசையில், 35 நாட்கள் இரவும், பகலுமாக செங்கடலைக் கடக்க வேண்டியிருந்திருக்கும். ஆனால் தேவனோ 3 மைல் அகலமான அளவிற்கு செங்கடலை பிளந்து வழி உண்டாக்கினார். எனவே அவர்கள் வரிசைக்கு 5000 பேர் என்ற விகிதத்தில் ஒரே இரவில் தானே செங்கடலை கடந்து முடித்தனர். எத்தனை மாபெரும் ஆச்சரியம். மீண்டும் ஒரு சிக்கல் இருந்தது. ஒவ்வொரு நாள் இரவும் இஸ்ரவேலர் ஓய்வெடுக்க 750 சதுர மைல் பரப்பளவிலான இடம் தேவைப்பட்டது. நினைத்து பாருங்கள். இரவு மட்டும் இளைப்பாற இத்தனை விஸ்தாரமான இடம் தேவையாக இருந்தது.

மோசே எகிப்திலிருந்து புறப்படும் முன்பு இதையெல்லாம் யோசித்து தகுந்த முன்னேற்பாடுகள் செய்திருப்பார் என்று நினைக்கிறீர்களா? நிச்சயமாக இல்லை. மோசே இந்த காரியங்களுக்காக முற்றிலும் கர்த்தரையே சார்ந்து, அவரை மாத்திரமே முழுமையாக விசுவாசித்தார். மோசே விசுவாசித்தபடியே கர்த்தராகிய தேவன், உண்மையுள்ளவராய், சகல தேவைகளையும், அனுதினமும் ஈந்து, இஸ்ரவேல் மக்களை 40 வருட காலமாக, வனாந்தரத்தில் குறைவின்றி பராமரித்தார். உங்களுக்கும் செய்வார்! விசுவாசியுங்கள்!



# தீர்க்கதரிசன ஆகமங்கள்

## ஏசாயா முதல் மல்கியா வரை : Isaiah to Malachi

## புத்தக அறிமுகம்


**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University


### பொதுவான முன்னுரை:

தனித்தனியே தீர்க்கதரிசன புத்தகங்களுக்கு அறிமுகம் தருவதற்கு முன்பு, ஏசாயா முதல் மல்கியா வரையுள்ள 17 புத்தகங்களுக்கும் பொதுவான முன்னுரை தருவது அவசியம் எனக் காண்கிறோம்.

பழைய ஏற்பாட்டிலுள்ள 39 புத்தகங்களும் இஸ்ரவேல் ஜனங்களின் சரித்திரத்தில் மூன்று காலங்களைக் குறிக்கின்றன.

1. ஆதியாகமம் முதல் எஸ்தர் வரையுள்ள 17 புத்தகங்கள் இஸ்ரவேலரின் தோற்றம், பெருக்கம், வளர்ச்சி குறித்த விபரங்களைத் தருகின்றன. இவற்றில் முதல் ஐந்து புத்தகங்களைப் **பஞ்சாகமம்** என்றும் நியாயப்பிரமாணம் என்றும் அழைக்கிறோம். அடுத்த 12 புத்தகங்களை **சரித்திர ஆகமங்கள்** என்றும் அழைக்கிறோம்.
2. யோபு முதல் உன்னதப்பாட்டு வரையுள்ள 5 புத்தகங்கள் **செய்யுள் ஆகமங்கள்** என்று அழைக்கப்படுகின்றன. இப்புத்தகங்கள் இஸ்ரவேலரின் பொற்காலத்தில் எழுதப்பட்டவை.
3. ஏசாயா முதல் மல்கியா வரையுள்ள 17 புத்தகங்கள் இஸ்ரவேலரின் வீழ்ச்சியின் காலத்தில் எழுதப்பட்டவை. இவற்றை **தீர்க்கதரிசன புத்தகங்கள்** என அழைக்கிறோம். இவற்றில் 16 புத்தகங்கள் தீர்க்கதரிசனப் புத்தகங்களாகும். **"புலம்பல்"** புத்தகம் எருசலேமின் அழிவைக்குறித்து எரேமியா தீர்க்கதரிசி பாடிய புலம்பல் பாட்டு ஆகும்.

ஏசாயா முதல் தானியேல் வரையுள்ள நான்கு (ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல்) புத்தகங்களும் 'பெரிய தீர்க்கதரிசிகள்' என்று அழைக்கப்படுகின்றன. ஏனெனில் பிற தீர்க்கதரிசன புத்தகங்களைக்காட்டிலும் இவை பெரிய புத்தகங்கள்.

ஓசியா முதல் மல்கியா வரையுள்ள 12 தீர்க்கதரிசிகளும் தங்கள் தீர்க்கதரிசனங்களை சிறிய புத்தக அளவில் தந்தபடியால் அவர்கள் சிறிய தீர்க்கதரிசிகள் என்றழைக்கப்படுகின்றனர்.

### இஸ்ரவேலரின் சரித்திரத்தில் தீர்க்கதரிசிகள்:

### யார் இந்த இஸ்ரவேலர்?

ஆபிரகாமின் சந்ததியார் வேதாகமத்தில் **இஸ்ரவேலர், எபிரெயர், யூதர்** என்னும் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றனார். ஆபிரகாமின் சந்ததியாரைக்கொண்டு தேவன் ஏற்படுத்திய தேசம் இஸ்ரவேல் தேசமாகும்.

இந்த இஸ்ரவேல் மக்களுக்கு தமது வார்த்தைகளை எடுத்துரைக்க அந்தந்த காலங்களில் வித்தியாசமான ஊழியர்களை கர்த்தர் எழுப்பினார். ஆசாரியர்கள், நியாயாதிபதிகள், ஞானிகள், சங்கீதக்காரர்கள், தீர்க்கதரிசிகள் ஆகிய அனைவருமே

இஸ்ரவேலரின் சரித்திரத்தில் குறிப்பிட்ட வேலையை செய்யும்படி ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட தலைவர்களாவர்.

இவர்களில் 'ஆசாரியர்கள்' லேவி கோத்திரத்திலிருந்து எழும்பி, சந்ததி சந்ததியாய் தங்கள் ஊழியத்தை நிறைவேற்றினர். பரிசுத்த மனிதர்களாய் வாழ்ந்து ஜனங்களின் பாவங்களைக் கண்டிக்க வேண்டிய இந்த ஆசாரியர் பலர் சமுதாயத்தில் மிக ஈனமானவர்களாகவும், கொடிய பாவிகளாகவும் வாழ்ந்து, நெறிதவறிய ஊழியத்தைச் செய்தனர்.

ஆனால் தீர்க்கதரிசிகளோ ஒரே கோத்திரத்திலிருந்து தந்தை-மகன் வழிப் பாரம்பரியமாய் வராமல் தேவனுடைய வார்த்தைகளை மக்களுக்கு அறிவிக்க தேவனால் அழைக்கப்பட்டவர்களாய்த் தோன்றினர். பரிசுத்தமாய் வாழ்ந்து தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை உத்தமத்துடன் நிறைவேற்றினர். எனவே அவர்கள் இஸ்ரவேலரின் சரித்திரத்தில் உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளனர்.

இஸ்ரவேல் ஜனங்களை ஆளும்படி இராஜாக்களை தேவன் ஏற்படுத்திய நோக்கம் மேன்மையானதாகும். இஸ்ரவேலர் யெகோவா தேவனுடைய கட்டளைகளைக் காத்து நடக்க இராஜாக்கள் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். அத்துடன் வரப்போகும் மேசியாவின் நித்திய ஆளுகைக்கு எதிர்பார்த்து வாழும் வாழ்க்கைக்கும் அவர்களை தயார்நிலையில் வைத்திருக்கவேண்டும். இதுவே இராஜாக்கள் ஏற்படுத்தப்பட்ட நோக்கம். ஆனால் இஸ்ரவேல் தேசத்தில் சவுல், தாவீது மற்றும் சாலமோன் ஆகிய இராஜாக்களுக்குப் பிறகு வடக்கு, தெற்கு இராஜ்யங்களை ஆண்ட 39 இராஜாக்களில் ஒருசிலரைத் தவிர மற்ற அனைவருமே தாங்கள் ஏற்படுத்தப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றவில்லை. தீர்க்கதரிசிகளோ, மக்களுக்கு எச்சரிப்பின் சத்தத்தைக் கொடுத்த அதே வேளையில் இத்தகைய இராஜாக்களையும் கடிந்துகொண்டு எச்சரித்தனர்.

தாங்கள் பெற்றிருந்த தெய்வீக வெளிப்பாட்டின் அறிவு, தேவன் தங்களுக்குக் கொடுத்த தெய்வீக வல்லமை, தம்மில்தாமே அவர்கள் கொண்டிருந்த உயர்ந்த ஒழுக்கமான வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை கொண்டே தீர்க்கதரிசிகள் தங்களது ஊழியத்தை நிறைவேற்ற முடிந்தது.

**வடக்கு இராஜ்யம் முறியடிக்கப்படுதல்:**

வடக்கு இராஜ்யத்தில் யெரொபெயாம் தொடங்கி (கிமு 931) ஓசெயா வரை (கிமு 722) 19 பேர் அரசாண்டனர் (1இராஜா. 12ம் அதிகாரம் முதல்-2இராஜா. 17ம் அதிகாரம் வரை). வடக்கு இராஜ்யம் (இஸ்ரவேலர்) கன்றுக்குட்டி வணக்கம் தொடங்கி கானானியாரின் பிரதான தெய்வமாகிய பாகாலையும் வழிபட்டு யெகோவா தேவனை விட்டு விலகிச் சென்றார்கள்.

இந்த ஜனங்களை மறுபடியும் யெகோவாவின் மார்க்கத்துக்குத் திருப்பிக்கொண்டுவரும்படி ஓசியா, ஆமோஸ், யோனா, மீகா ஆகியோர் தங்கள் தங்கள் காலத்தில் தீர்க்கதரிசனம் சொல்லி ஊழியம் செய்தனர் எனினும் மக்கள் மனந்திரும்பவில்லை.

எனவே, தேவன் அவர்களை கிமு 722ம் வருடத்தில் அசீரியர் கையில் ஒப்புக்கொடுத்தார். அசீரியர் வந்து, இஸ்ரவேலரை முறியடித்து, தங்கள் தேசத்துக்கு அவர்களை சிறைக்கைதிகளாகக் கொண்டு சென்றனர் (2இராஜா. 17:6-23).

**சமாரியர் என்ற புதிய கலப்பு ஜாதியினர்: (கிமு 722); (2இராஜா. 17:23-41).**

அசீரியருடைய போர்க் கொள்கையின்படி, தாங்கள் ஜெயித்த தேச மக்களை

தங்கள் தேசத்துக்குச் சிறைக்கைதிகளாக நாடுகடத்திய அதேவேளையில், தங்கள் தேசக் குடிமக்கள் பலரை தாங்கள் வென்றெடுத்த தேசத்தில் குடியேற்றினர்.

ஏற்கனவே அசீரியரால் இஸ்ரவேலில் விட்டுச்செல்லப்பட்ட இஸ்ரவேலருக்கும், புதிதாய் குடியேற்றம் செய்யப்பட்ட அசீரியருக்கும் பிறந்த சந்ததியினரே சமாரியர் (இஸ்ரவேல்+அசீரியர்=சமாரியர்). பிற்காலத்தில் இந்த சமாரியர் புறஜாதிகளுள் ஒரு ஜாதியாகவும் நடத்தப்பட்டனர். இவர்கள் யெகோவா தேவனுக்கு ஆராதனை செய்ததுமன்றி அசீரிய தெய்வங்களையும் ஆராதித்து வந்தனர் (எஸ்றா 4:2; யோவான் 4:20).

## தெற்கு ராஜ்யம் (யூதா) முறியடிக்கப்படுதல் : (கிமு 586)

வடக்கு ராஜ்யம் முறியடிக்கப்பட்டு அசீரியாவுக்குச் சிறையாகக்கொண்டு செல்லப்பட்டபின்பு கிமு 586ம் ஆண்டு வரை (சுமார் 135 வருடங்கள்) தெற்கு ராஜ்யமாகிய யூதா நிலைத்து நின்றது. இதில், கிமு 931 முதல் 586 வரை ரெகொபெயாம் முதல் சிதேக்கியா வரையுள்ள இருபது இராஜாக்கள் யூதாவை அரசாண்டனர், (1இராஜா 12ம் அதிகாரம் முதல் 2 இராஜா. 25ம் அதிகாரம் வரை). இவர்களும் வடக்கு ராஜ்யம் செய்த விசுவாசத் துரோகச் செயல்களில் ஈடுபட்டு, யெகோவா தேவனைவிட்டு விக்கிரக வழிபாட்டுக்குச் சென்றனர்.

அந்த அரசர்களின் காலத்தில் **ஏசாயா, எரேமியா, யோவேல், மீகா, ஆபகூக், செப்பனியா** ஆகியோர் தீர்க்கதரிசனம் உரைத்து மக்களின் தவறான பாதைகளைக் கண்டித்தனர்.

(மீகா வடக்கு ராஜ்யத்துக்கும், தெற்கு ராஜ்யத்துக்கும் தீர்க்கதரிசனம் உரைத்தான்).

எனினும் மக்கள் மனந்திரும்பி யெகோவாவின் வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கவில்லை.

எனவே தெற்கு ராஜ்யமாகிய யூதாவையும் தேவன் பாபிலோனியரின் கையில் ஒப்புக்கொடுத்தார். பாபிலோன் மன்னனாகிய நேபுகாத்நேச்சார் மூன்று காலக்கட்டங்களாக யூதாவுக்குப் படையெடுத்து வந்து அவர்களை சிறைப்பிடித்துச் சென்றான்.

- கிமு 606-ம் வருடத்தில் முதல் படையெடுப்பு: இதில் யோயாக்கீம் மன்னனையும், தானியேல், சாத்ராக், மேஷாக் போன்றோருடன் ஏராளம் பேரையும் சிறைபிடித்துச் சென்றான். (2இராஜா. 23:36; 2இராஜா. 24:16).
- கிமு 597ம் ஆண்டில் இரண்டாம் படையெடுப்பு. இரண்டாம் முறையாக நேபுகாத்நேச்சார் படையெடுத்து வந்து யோயாக்கின்-ஐயும் எசேக்கியேல் போன்ற திரளானோரையும் பாபிலோனுக்குச் சிறைபிடித்துச் சென்றான், (2இராஜா, 24:6-16).
- கிமு 586-ல் மூன்றாம் படையெடுப்பு: இம்முறை நேபுகாத்நேச்சார் படையெடுத்து வந்து எருசலேம் தேவாலயத்தையும் யூதாவையும் முற்றிலும் பாழாக்கி சிதேக்கியாவையும் பிறரையும் சிறையாகக் கொண்டு சென்றான் (2இராஜா. 24:18-25:21).

## 70வருட சிறையிருப்பு

தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளின்படியே யூதா ஜனங்கள் எழுபது ஆண்டுகள் பாபிலோனில் சிறைப்பட்டிருந்தனர். யூதா தேசம் வனாந்தரமும் பாழுமாய்க்கிடந்தது,

(எரே.25:11). ஏற்கனவே பாபிலோனுக்குச் சிறைப்பட்டு வந்துவிட்ட **தானியேலும், எசேக்கியேலும்** சிறைப்பட்டு வந்துவிட்டவர்களுக்கும், வர இருந்தவர்களுக்கும் (கிமு 606க்கும் 586க்கும் இடைப்பட்ட காலத்தில் பாபிலோனிலிருந்துகொண்டு தீர்க்கதரிசனம் உரைத்தனர் (எசே. 1:1-3; தானி 1:1-8; 9:1-2).

### சிறையிருப்பிலிருந்து திரும்பிவருதல் கிமு 536

எழுபது வருட பாபிலோனில் சிறையிருப்பிலிருந்த யூதர்கள் பெர்சிய மன்னனாகிய கோரேஸின் காலத்தில் தேவாலயத்தை திரும்பவும் எடுத்துக்கட்டும்படி யூதாவுக்குத் திரும்பி வந்தனர். தேவாலயத்தைக் கட்ட ஆரம்பித்தனர். தேசத்தில் குடியிருந்த சமாரியரால் எதிர்ப்பு வந்தபடியால் தேவாலயக் கட்டுமானப்பணி தடைப்பட்டது. அக்காலத்தில் **ஆகாய், சகரியா** என்னும் இரு தீர்க்கதரிசிகளும் எழும்பி மக்களுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்து ஆலயத்தைக் கட்டும்படி ஊக்கமளித்தனர்.

இந்த விபரங்களெல்லாம் எஸ்றா புத்தகத்திலும், ஆகாய், சகரியா ஆகிய புத்தகங்களிலும் காணக் கிடைக்கிறது.

### ஆலயம் கட்டிமுடித்த பின்பு

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்து, ஆலயத்தைக்கட்டி முடித்த பின்பும், யூத மக்களின் மார்க்க சமூக வாழ்க்கை யெகோவா தேவனுக்குப் பிரியமாயிருக்க வில்லை, எனவே அவர்களைக் கண்டித்தும், யெகோவா தேவனுடைய நெறிமுறைகளை எடுத்துரைத்தும் மல்கியா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைத்தான்.

மல்கியாவிற்கு பிறகு நானூறு ஆண்டுகள் தீர்க்கதரிசிகளின் மூலமாய் மக்களுக்கு தேவன் வாக்கு அருளவில்லை. யோவான் ஸ்நானன்; மேசியாவின் வருகையை அறிவிக்க வந்த காலம் வரை சரித்திரத்தில் இருண்ட காலம் என அறியப்படுகிறது. இந்த நானூறு ஆண்டுகாலங்கள் (பழைய புதிய ஏற்பாட்டு) ஆகமங்களுக்கு இடைப்பட்ட காலம் என்றும் அறியப்படுகிறது.

### புறஜாதியாருக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள்

- தெற்கு ராஜ்யமாகிய யூதாவில் வாழ்ந்த ஒபதியா தீர்க்கதரிசி யூதா ஜனங்களுக்கு எதிர்த்து வந்த ஏதோமியருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்தான்.
- தேவ வார்த்தைகளை சுமார் ஐம்பது ஆண்டு காலங்களாக வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேலுக்குத் தீர்க்கதரிசனம் சொன்ன யோனா ஒரு பயணமாக அசீரியாவின் தலைநகராகிய நினிவேக்குச் சென்று அதன் அழிவைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைக்க அனுப்பப்பட்டான். மக்கள் யோனாவின் செய்தியால் மனந்திரும்பினர்; நியாயத்தீர்ப்பாகிய அழிவு தவிர்க்கப்பட்டது.
- யோனாவின் காலத்திலிருந்து சுமார் நூறு ஆண்டுகளுக்குப்பின் (கிமு 612), நினிவே பட்டணத்தார் மீண்டும் தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் எதிராய் செயல்பட்டபோது அவர்களுடைய அழிவைப்பற்றி நாகூம் தீர்க்கதரிசனம் உரைத்தான். அப்படியே நினிவே அழிக்கப்பட்டது.

ஆக, பதினாறு தீர்க்கதரிசிகளும் யாருக்கு, எப்போது தீர்க்கதரிசனம் உரைத்தனர் என்பதை மேலே தரப்பட்டுள்ள விபரங்களின்படி அறிந்து, தெளிவுடன் தீர்க்கதரிசனப் புத்தகங்களை வாசித்தல் நற்பலனைத் தரும்!



# தடைகள் யாவும் அகற்றபடக் கூடியவைகளே

Rev. J. தேவதாசன் கலையரசன்
உதவி இயக்குநர், வடமேற்கு மிஷன்

ஆதிச்சபையில் வரம் பெற்ற ஒரு சிலர் மட்டும் சுவிசேஷம் அறிவிக்கவில்லை. அனைவரும் அறிவித்தார்கள் (அப்.4:31;8:4;11:19). இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை 5 இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. (மத்.28:18-20; மாற்கு 16:15; லூக்கா 24:46-48; யோவான் 20:21; அப்.1:8). பவுலுடைய கணிப்புப்படி உயிர்த்தெழுதலுக்குப் பின் இயேசு கிறிஸ்துவை தரிசித்தவர்கள் குறைந்தது 500பேர். எனவே பிரதான கட்டளை என்பது 12 சீஷர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட கட்டளை என்று கூற இயலாது.

பிரதான கட்டளையைக் கேட்டவர்களில் சிலர் அல்ல, அதாவது அவர்களில் சிலர் அல்ல, கேட்ட, அனைவரும் அதாவது, அவர்கள் புறப்பட்டுப் போய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள் (மாற்கு 16:20) என்று சொல்லப்பட்டுள்ளது.

சபை ஏன் ஏற்படுத்தப்பட்டது என்ற கேள்விக்கு, சபையாரில் கிறிஸ்துவின் சாயலை உருவாக்குவதற்கு தான் சபை ஏற்படுத்தப்பட்டது என்ற பதில் கூறப்பட்டுள்ளது (எபே.4:11). கிறிஸ்துவின் சாயலை விசுவாசிகள் மேல் விழச் செயவதற்கான வழி என்னவென்ற கேள்விக்குப் பதிலாக, பக்தி விருத்தியடையச் செய்வதும், சுவிசேஷ வேலையைச் செய்வது மட்டுமே (4:11-12) என்று சொல்லப்பட்டுள்ளது. இங்கும் சபையில் உள்ள சிலருக்கான சிலாக்கியமாக பரிசுத்த ஆவியானவர் இதைக் கூறவில்லை. **அனைவரும்** கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராக வேண்டும் என்றே சொல்லப்பட்டுள்ளது.

இன்று, ஒரு சபையில் 15 சதவீத மக்களே சுவிசேஷ ஊழியம் செய்பவர்கள் அல்லது இயேசுவின் சாயலை அடையக்கூடியவர்கள் என்கின்ற புள்ளி விவரம் ஒருவேளை உண்மையாக இருக்கக்கூடும். அப்படியானால் 85 சதவீத விசுவாசிகள் நற்செய்தி அறிவிப்பதில்லை என்பதை எப்படி எளிதாக எடுத்துக் கொள்ள முடியும்? சபை ஏற்படுத்தப்பட்ட நோக்கத்தை 85 சதவீத விசுவாசிகள் புரிந்து கொள்ளவில்லை என்றால் அது நமது இருதயத்தை உடைக்க வேண்டாமா?

ஒரு சில சபைகளில் 'போதும்' என்ற மனநிலை வந்துவிட்டது போல. எனவே சுவிசேஷ ஊழியம் குறைந்து வருகிறது. ஞானஸ்நானம் எடுப்போரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

ஆனால் வேறு அநேக சபைகளின் தலைவர்களுக்கு சபையின் **நிர்விசாரம்** குறித்து அக்கறையும் பாரமும் உண்டு.

செயல்படும் 15 சதவீதத்தினரை அங்கிகரிக்கவும், பாராட்டவும், செயல்படாத 85 சதவீதத்தினரை தட்டி எழுப்ப போராடும் சபைகளுக்கு சிறிதளவேனும் உதவிடும் என்ற நம்பிக்கையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

## I. சுவிசேஷம் அறிவிப்பதற்கு தடையாக கருதப்படும் பொதுவான காரணங்கள்

**ஏன்** நீங்கள் சுவிசேஷத்தை அறிவிக்கிறதில்லை? இக்கேள்வி கேட்கப்படும்போது விசுவாசிகள் பொதுவாக கூறும் பதில்கள் இவைகள். (பெரும்பாலும் சாக்கு போக்குகள் தான்).

1. எனக்கு பயமாக இருக்கிறது (எதிர்ப்பை மையமாகக் கொண்டது).
2. எனக்கு வெட்கமாக இருக்கிறது (மற்றவர்கள் என்னைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?).

3. எனக்கு நேரமில்லை (அனைவருக்கும் 24மணி நேரம் தான், ஒரு சிலருக்கு நேரம் கிடைக்கிறதே)
4. இது போதகரின் வேலை எனக்கு அழைப்பு இல்லை (1பேதுரு 2:9 வசனத்தை அறியாதவர்களின் கூற்று இது).

## II. எதிர்ப்பே இல்லாவிட்டால் நானும் சொல்வேன் என்ற மனநிலை அநேகருடைய மனத்தடையாகிறது

- சுவிசேஷ ஊழியத்தையும் எதிர்ப்பையும் பிரிக்க முடியாது (லூக்கா 10:3).
- நமது தேசத்தில் எதிர்ப்புகளற்ற ஒரு சூழ்நிலை வரட்டும். அதன்பிறகு நான் சுவிசேஷம் சொல்கிறேன் என நினைப்பவர்கள் இனி என்றுமே சுவிசேஷ ஊழியத்தை செய்ய இயலாது.
- சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தான் அடி உரமாகும் (அப்.4:18). அந்த எதிர்ப்பே அவர்களுக்கு மேலும் வைராக்கியத்தை ஏற்படுத்தியது (அப்.4:20).
- அந்த எதிர்ப்பின் மத்தியில், வீதியில் சென்று சும்மா கதைவிட முடியாதே!. ஆகவே வல்லமை வரங்களோடு சொல்ல வேண்டும் என்ற நிர்பந்தம் ஏற்பட்டது. அதுவே அவர்களை கூடி ஜெபிக்க வைத்தது (அப்.4:29-30,24) ஆவியின் வரங்களை நாட வைத்தது.
- எதிர்ப்பின் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கும் வழிமுறைகளையே இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்கு 3 வருடம் பயிற்சியாக கொடுத்திருந்தார்.
- அன்று அவர்கள் அந்த எதிர்ப்பை முறிக்க ஜெபிக்கவில்லை, எதிர்ப்பின் மத்தியில் முழு தைரியத்தோடு **வசனத்தை சொல்லும்** கிருபை கேட்டார்கள் (அப்.4:29,30) **எல்லோர்** மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது.
- **அனைவரும்** கிருபை பெற்றுக் கொண்டார்கள். தைரியமாகச் சொன்னார்கள் (அப்.4:31).

## III. தடைகளை வெல்லும் வழி

- இயேசு கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றினால் தடைகளை வெல்வது சாத்தியமே (மத்.4:19).
- அவரது வாழ்வின் மாதிரியை பின்பற்றும்போது பிறரைக் குறித்த மனதுருக்கம் ஏற்படும் (மத்.9:36-38).
- வாழ்வின் நோக்கமே பிதாவை மகிமைப்படுத்துவதாகிவிடும்.
- ஒவ்வொரு செயலிலும் மனிதரைப் பிடிப்பது மறைந்து கிடக்கும் (மத்.4:19; அப்.10:38).
- தம்மை ஏற்றுக் கொள்வோரிடமே நேரம் எடுத்து சுவிசேஷம் அறிவித்தார். வாதப் பிரதி வாதம் செய்து நேரத்தைப் போக்கவில்லை. சிலுவை வரை தம்மை ஏற்றுக் கொள்வோரிடமே "நேரம் எடுத்து" இராஜ்யத்திற்கான அழைப்பைக் கொடுத்தார் (லூக்கா 23:39-43).
- எதிர்ப்பு வந்தாலும் கோழையாக ஓடவில்லை. எதிர் கேள்வி கேட்டு சிந்திக்க வைத்தார்.
- முற்றிலும் புறக்கணித்தவர்கள், சபித்து கடந்து போகாமல் மனதுருக மன்றாட்டு ஜெபம் ஏறெடுத்தார் (லூக்கா 19:41).

## இறுதியாக

புறத்தடைகளை, அகத்தடைகளை தைரியமாக வெல்ல தமது சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியின் பெலனை பெற கட்டளையிட்டார் (அப்.1:8). பரிசுத்த ஆவியின் பெலனால் நிரம்பினார்கள். ஆயிரக்கணக்கான மக்களை கிறிஸ்துவுக்குள் நடத்தினார்கள் (அப்.2:41;4:4). பின்பு ஒருபோதும் அவர்கள் தடைகளை பேசிக்கொண்டு இருக்கவில்லை.



# துர்உபதேசங்கள் - ஏன் எப்படி?

**Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்**
செயலாளர், தமிழ் பிரதேச ஏ.ஜி.சபைகள்
மூத்த போதகர், ஏ.ஜி. சர்ச், வேலூர்

பரிபூரணஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். 2 பேதுரு 2:1 பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள் 1 யோவான் 3:2 ஆதிதிருச்சபையில் கள்ள உபதேசங்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் அதிகமாக இருந்தார்கள். ஆரம்பம் முதலே திருச்சபை, வெளியே இருந்து வந்த பிரச்சனைகளையும் (External issues), உள்ளே இருந்து வந்த பிரச்சனைகளையும் (Internal issues) சந்தித்து வந்தன. ஆனால் உள்ளே இருந்து வந்த பிரச்சனைகளுக்கு தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

## I. துர் உபதேசங்கள் ஏன் வருகின்றன?

பொதுவாக துர் உபதேசங்கள் அறியாமையால், சரியாக விளங்கிக் கொள்ளாததால், சூழ்நிலையை கருத்தில் கொள்ளாததால், தன்னுடைய கருத்துக்களை வலியுறுத்த விரும்பியதால் ஏற்பட்டது. ஒரு சில முக்கிய காரணங்களை கீழே கொடுக்கிறேன்.

### 1. வேத பகுதியை தவறாக புரிந்துகொள்ளுதல் (Misunderstanding of the Text)

வேதாகமம் ஒரு குறிப்பிட்ட கலாச்சார வரலாற்றுப் பின்னணியில் எழுதப்பட்டது (Written in a Particular Historical an Cultural Context). அதை அறியாமல் விளக்கம் கொடுக்க முற்படும்போது உபதேச கோளாறுகள் வருகிறது. பிலேமோன் 1:10ல்- கட்டப்பட்டிருக்கையில் பெற்ற குமாரனாகிய ஒநேசிமு, என்று பவுல் குறிப்பிட்டதை, பவுலும்- சீலாவும் சிறைச்சாலையிலிருந்தபோது பிறந்தவன்தான் ஒநேசிமு என்று பலர் குறிப்பிடுவது. நம்முடைய கலாச்சாரத்தில் சீலா என்பது ஒரு பெண்ணின் பெயர். ஆனால் அவர் ஒரு ஆண்.

### 2. குறிப்பிட்ட பகுதியை மட்டும் தெரிந்தெடுத்தல் (Selectivity)

ஒரு போதனை கொடுக்கும்போது, அல்லது ஒரு காரியத்தை வேதத்திலிருந்து விளங்க முயற்சிக்கும்போது முழு வேதாகமத்தின் போதனைகளை கருத்தில் கொள்ளாமல், ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் எடுக்கும்போது, பிரச்சனை வருகிறது. 1 கொரிந்தியர் 7:1-ல் ஸ்திரீயை தொடாமலிருக்கிறது நல்லது என்ற வாக்கியத்தை வைத்து, திருமணம் செய்வது தவறு, ஊழியர்கள் கண்டிப்பாக திருமணம் செய்யக் கூடாது போன்ற கருத்துக்களை, திருமணத்தை ஏற்படுத்தின ஆண்டவரையே குறைகூறுவதற்கும் காரணம், ஒரு வசனத்தை வைத்து ஒரு உபதேசத்தை உருவாக்க நினைத்ததால் வந்தது.

### 3.தனிப்பட்ட கருத்துக்களை வேத போதனையாக/உபதேசமாக கூறுதல் (Insisting Personal Opinions as Bible Doctrines)

ஊழியர்கள், தங்களது அனுபவங்களை மட்டும் பேசக்கூடாது. வசனங்களைத் தான் பேச வேண்டும். ஒரு சிலர் தங்களது அனுபவங்களை அதிகமாக வலியுறுத்த

நினைக்கும்போது, அது துர்உபதேசமாக மாறுகிறது. ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டிய அவசியமில்லை (1 யோவான் 2:27) என்ற வசனத்தை வைத்து, சபைக்குப் போக வேண்டிய அவசியமில்லை, ஆவியானவர் நேரடியாக உங்களோடு பேசுவார் என போதிக்கிறவர்கள் உண்டு. கள்ள உபதேசங்களுக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்ற சூழ்நிலையில் (Context) இவ்வசனம் கொடுக்கப்பட்டது.

### 4. தவறாக பொருத்துதல் (False Combination)

எழுதப்பட்ட சூழ்நிலைக்கு மாறாக ஒரு வசனத்தை எடுத்து, அதை இன்னொரு இடத்தில் சொல்லப்பட்ட வசனத்தோடு பொருத்தி பேசுவது தவறு. 'ஸ்திரீகளை தொடாமலிருப்பது நல்லது' என்ற வார்த்தையை, 'ஸ்திரீகளினால் கறைபடாதவர்கள்' என்ற வெளிப்படுத்துதலில் சொல்லப்பட்ட வசனத்தோடு ஒப்பிட்டு, திருமணமாகாதவர்கள் தான் சீயோனுக்கு செல்ல முடியும் என்ற உபதேசத்தை உருவாக்கிவிட்டார்கள். இது தவறான பொருத்துதல் ஆகும். வெளிப்படுத்துதலில் சொல்லப்பட்ட ஸ்திரீ-உலகத்தால் கறைபடாத என்ற அர்த்தத்தில் கொடுக்கப் பட்டுள்ளது.

### 5.வேதத்திற்கு புறம்பான கருத்துக்களை கூறும் தலைவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல் (Extra Canonical Authority)

அநேக துர்உபதேசங்களை போதிக்கிற ஸ்தாபனங்கள், ஒரு மனிதனின் வார்த்தைகளுக்கு, சொப்பனங்களுக்கு, தீர்க்கதரிசனங்களுக்கு, அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் ஏற்படுத்தப்பட்டது என்பது சரித்திர உண்மை. தலைவர்கள் ஆண்டவர் நமக்கு கொடுத்த வரங்கள். ஆனால் அவர்களுடைய சொப்பனங்கள், கருத்துக்களைவிட, வேதம் தான் உயர்ந்தது. வேதத்திற்கு புறம்பான/முரணான எந்த கருத்தும், சொப்பனங்களும், தீர்க்கதரிசனங்களும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது. அநேகம் உண்டு, முக்கியமானவைகளை கூறியிருக்கிறேன்.

## II.எப்படி அவர்களை கண்டுபிடிப்பது?

2 பேதுரு 2:1-3 வரை சில காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1.வேதப்புரட்டுகளை தந்திரமாக நுழைய பண்ணுவார்கள் (Secretly Bring in destructive Heresies/Opinions)

வேதம் எளிமையாக, அனைவரும் விளங்கும் நடையில் எழுதப்பட்டுள்ளது. உபதேசங்கள், சத்தியங்கள் என்ற பெயரில் ஒரு சிலர் வேத உண்மைகளை புரட்டி, தந்திரமாக, கவர்ச்சியாக, ஜனங்கள் விரும்புகிற வகையில் நுழையப் பண்ணுவார்கள். அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### 2.ஆண்டவரை மறுதலிப்பார்கள் (Denying Christ)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இல்லாமல், அவருடைய சிலுவை பாடுகள் இல்லாமல், கிறிஸ்தவ மார்க்கம் இல்லை. தங்களுடைய ஊழியங்களில் தங்களை முன்னிறுத்துகிறவர்கள், செய்திகளில் ஆண்டவரையோ, அவருடைய வார்த்தைகளையோ பேசாதவர்கள், பாடுகளை மறுதலிக்கிறவர்கள், 'இயேசு' என்ற சத்தியத்தை குறிப்பிடாதவர்கள் - இவர்கள் எல்லாருமே கள்ளத்தீர்க்கதரிசிகள் தான்.

### 3. கெட்ட நடத்தையுள்ளவர்கள் (Immoral)

உபதேச கோளாறுகள் உள்ளவர்களிடம், ஒழுக்கம் சம்பந்தப்பட்ட காரியங்களிலும் கண்டிப்பாக பிரச்சனைகள் வரும். காரணம் அவர்கள் வேத

சத்தியங்கள் மாற்றப்படுவதில், ஒத்துப்போயிருக்கிறார்கள். வார்த்தைகளில், செயல்களில், நடவடிக்கைகளில் கண்ணியம் இல்லாதவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

### 4. பொருளாசை உடையவர்கள் (Money Minded)

பலவிதமான கவர்ச்சிகரமான திட்டங்கள் மூலம் பல தீர்க்கதரிசிகள் திருச்சபைகளை சார்ந்த ஜனங்களிடத்தில் பணங்களை பெறுகிற திட்டத்திடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நல்ல போதகர்கள், சுவிசேஷகர்கள், தீர்க்கதரிசிகள் பணங்களை சார்ந்து ஊழியம் செய்யமாட்டார்கள். தேவையான பொருளாதாரத்தை ஆண்டவர் தருவார் என்ற நிச்சயத்தோடு செயல்படுவார்கள். உங்களை மயக்கினவன் யார்? (கலா 3:1)

### 5. தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்துவார்கள் (Make you their Followers)

எல்லா ஊழியர்களும், வரங்களும்,'சபை பக்திவிருத்தியடைய' 'பரிசுத்தவான்கள் சீர்பொருந்த' (எபே 4:12) தான் கொடுக்கப்பட்டன. தங்களுக்கென்று கூட்டம் சேர்க்கிற யாவரும் தவறானவர்கள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். சத்தியத்திற்கு கீழ்ப்படியாமற்போக உங்களை தடைசெய்தவன் யார்? (கலாத்தியர் 3:7)

## III. நாம் என்ன செய்ய வேண்டும்?

- ஒருபோதும் மனிதர்களுக்காக வேத சத்தியங்கள் மாற்றப்படுவதற்கு ஒத்துப்போகாதிருங்கள். (Never Compromise with the Biblical Doctrines for any Human) கலாத்தியர் 5:11
- வசனத்தில் தேறினவர்களாக மாறுங்கள். (Equip yourselves with the word of God) 1தீமோ 4:15 வேதத்தை திரும்ப திரும்ப வாசியுங்கள், தியானம் பண்ணுங்கள், ஆராய்ந்து பாருங்கள்.
- இப்படிப்பட்ட போதனைகளை கண்டிப்பாக கடிந்து கொள்ளுங்கள் (Rebuke their Teachings) - தீத்து 1:14 அவர்களுக்கு செவிகொடுக்க வேண்டாம், விலகியிருங்கள், தைரியமாக கடிந்து கொள்ளுங்கள்.
- அவர்கள் கொடுக்கிற எந்த இலக்கியங்களையும் (Literatures) வாங்கி வாசிக்க வேண்டாம்.
- ஆரோக்கியமான உபதேசங்களையே கேளுங்கள், பேசுங்கள், பகிர்ந்து கொள்ளுங்கள் (தீத்து 2:1)
- ஆண்டவரிடத்தில் விசேஷித்த பகுத்தறியும் வரத்தை கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது எளிதாக இவைகளை கண்டு கொள்ள முடியும்.
- உங்கள் மனசாட்சியில் சின்ன உறுத்தல்கள் வரும்போது அனுபவமுள்ள ஊழியர்களிடத்தில், போதகர்களிடத்தில் கேட்டு தெளிவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- எந்த ஊழியர்கள் சொன்னதையும், கண்ணை மூடிக்கொண்டு அப்படியே நம்பாமல், வேதத்திற்கு ஒத்துப்போகிறதா என ஆராய்ந்து பாருங்கள்.

ஆண்டவர் தாமே துர்உபதேசங்களிலிருந்து நம்மையும், நம்முடைய திருச்சபைகளையும், அடுத்த சந்ததியையும் காப்பாராக.

- நீங்கள் என் அண்டை வீட்டிலிருந்தீர்கள்: நீங்கள் கோவிலுக்குப்போவதைப் பார்ப்பேன். நான் குழந்தையாயிருந்தேன்; என் பெற்றோர் கடவுள்களை வழிபட பல இடங்களுக்கு அழைத்துச் செல்வர். ஒரு கருப்பு புத்தகத்தை எடுத்துச் செல்வீர்கள். அது பைபிள் என்று பின்பு அறிந்தேன். இப்போது நான் நரகத்தில் அலறிக்கொண்டிருக்கிறேன். நீங்களே பரலோகத்தில் மகிழ்ந்திருக்கிறீர்கள். ஏன் எனக்கு நீங்கள் மோட்சம், நரகம் குறித்து அறிவிக்கவில்லை? பல்லாண்டுகள் அயலாராக வாழ்ந்தோமே. நேரம் கிடைக்கவில்லையா? நான் எங்கு போனால் என்ன என்று நினைத்துவிட்டீர்களா? எனக்கு நீங்கள் அக்கறை காட்டாமல் போனது ஏனோ, ஐயோ ஏனோ?
- என் மளிகைக் கடைக்கு நீங்கள் எப்போதும் வருவீர்கள். நான் கனிவோடும் புன்முறுவலோடும் உங்களுக்கு உதவினேன். உங்கள் கடவுளைப் பற்றி சொன்னால் நான் எதிர்த்துவிடுவேன் என்று என் முகம் காட்டியதோ? இல்லை மேடம், கடவுளைத் தேடி ஊர் ஊராகத் திரிந்தேன். ஒரு விபத்தில் உயிரிழந்து இந்தக் கொடூரமான இடத்திற்கு வந்து சேர்ந்தேன். பிசாசுகள் என்னைச் சித்ரவதைச் செய்கின்றன. உங்களைத்தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். உங்கள் கடவுளைக் குறித்து துண்டுப்பிரதியையோ, ஒரு புத்தகத்தையோ எனக்குக் கொடுத்திருப்பீர்களானால் நரகத்திற்குத் தப்பித்திருப்பேன். ஏன் மேடம் என்னிடம் இவ்வளவு கொடூரமாக நடந்து கொண்டீர்கள்?
- உங்களோடு கூட மூன்று மணிநேரம் ரயிலில் பயணித்தேன். நீங்கள் என் அருகில் அமர்ந்திருந்தீர்கள். உங்கள் வேதத்தை வாசித்தீர்கள். உங்கள் கடவுளைக் குறித்தும் பைபிளைக் குறித்தும் அறிய குறுகுறுப்பாயிருந்தது. என்னிடம் நன்றாகப் பேசினீர்கள். உங்கள் தின்பண்டங்களைக் கூடப் பகிர்ந்து கொண்டீர்கள். ஆனால் உங்கள் கடவுளைக் குறித்த பேசவேயில்லை. இப்போது உங்கள் கடவுள்தான் மெய்யான கடவுள் என்று அறிந்து கொண்டேன். ஏன் நீங்கள் மதத்தைக் குறித்துப் பேசவில்லை? இப்போது நரகத்தில் எரிந்து கொண்டிருக்கிறேன். ஏன், ஐயோ, ஏன்?
- டீச்சர் இரண்டு ஆண்டுகள் உங்களிடம் படித்தேன். பின்பு வேறு வகுப்பிற்குச் சென்றாலும் அவ்வப்போது உங்களைச் சந்தித்தேன். நான் பதினோராம் வகுப்பு படிக்கும்போது புற்றுநோய்க்குப் பலியானேன். ஏன் மேடம் என்னிடம் இத்தனை இரக்கமற்றவராய் நடந்து கொண்டீர்கள்? பாசமாய் எனக்குப் பாடங்களைக் கற்று கொடுத்தீர்களே. ஆனால் வாழ்க்கையிலிலேயே மிக முக்கியமான சத்தியத்தைக் கண்டுபிடிக்க அது எனக்கு உதவவில்லையே. இப்போது புழுக்களுடன் புரளுகிறேன். நீங்கள் போகும் அழகிய இடத்தைக் கனாக் காண்கிறேன். உலகத்திலேயே மிகப்பெரிய உண்மையை மறைத்து ஏன் என்னை ஏமாற்றிவிட்டீர்கள் மேடம்? ஐயயோ, என்ன செய்வேன்?
- டாக்டரைப் பார்க்க காத்திருந்தபோது நீங்கள் என் அருகில் அமர்ந்திருந்தீர்கள். வாழ்க்கையில் நரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த என்னை, தற்கொலை எண்ணம் ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தது. இயேசுவை தெரியுமா என்று திடீரென்று கேட்டீர்கள். பிறகு இயேசுவை நம்பினால் சமாதானம் பெறலாம் என்றீர்கள். உங்கள் வீட்டிற்கு வந்து உங்களுடன் பேசலாமா என வினவினேன். மருத்துவரைப் பார்த்துவிட்டு வீடு திரும்ப நேரமாகும் என்றீர்கள். காத்திருக்கிறேன் என்றேன். என்னை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றீர்கள். அங்கே முழந்தாழிட்டு இயேசுவை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். வேதம் ஒன்றைக் கொடுத்தீர்கள். இப்போது தகப்பாகிய கடவுளோடும் அவரது மகனாகிய இயேசு கிறிஸ்துவோடும் மற்ற எல்லா தேவபிள்ளைகளோடும் பரலோகில் இருக்கிறேன். உங்களைக் கட்டி அணைத்து நன்றி சொல்லக் காத்திருக்கிறேன். என்னிடம் பேச தைரியமாக உங்கள் வாயைத் திறவாதிருந்திருப்பீர்களானால்! இலவசமாகக் கொடுப்பதற்கு பைபிளின் விலை அதிகமே என கணக்குப் போட்டிருப்பீர்களானால்! இன்று நரகத்தில் துடித்துக் கொண்டிருப்பேன்.



# வடகிழக்கு மிஷனரி ஊழியம்


## Rev.A.எட்வின் பிரபாகரர்

இயக்குநர் - தமிழ் பிரதேச வடகிழக்கு மிஷன்

TAMIL DISTRICT MISSIONS

India and beyond...


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். நமது ஸ்தாபன மிஷன் ஊழிய பாரத்தை செய்தியின் மூலம் பகிர்ந்து கொள்வதில் சந்தோஷப்படுகிறேன்.

ஏசாயா 6:8-ம் வசனத்தின்படி மூன்று குறிப்புகளை பகிர்ந்துகொள்கிறேன். ஏசாயா 6:8-ல் யார் நமது காரியமாய் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தை ஏசாயா கேட்டான். இன்று வாசகர்கள் அனைவரின் உள்ளத்திலும், காதுகளிலும் இதே தேவ சத்தம் தொனிப்பதாக!. இனிகாலம் செல்லாது! என்பதையும், இது ஒரு கடைசி காலம் என்பதையும் அறிந்திருக்கிற தேவமக்கள் இருதயத்தில் தேவ சத்தம் தொனிப்பதாக!

### 1. தேவனின் காரியம்

ஏசாயா 6:8 நமது காரியம் என்று தேவன் குறிப்பிடுவது என்ன? 1 தீமோ.2:4 பவுல் அப்போஸ்தலன் குறிப்பிடுவது தேவனின் காரியமாகும். "எல்லாரும் இரட்சிக்கப்படுவதே" தேவனின் காரியமும், ஏக்கமும், பாரமும் ஆகும். இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட தேவ ஜனத்தின் பாரமும் அதுவேயாக வேண்டும். இந்தியாவின் ஜனத்தொகையில் 90% மேற்பட்டவர்கள் இன்னும் இயேசுவை அறியவில்லையே! இந்த தேவனின் காரியத்தை நமது காரியமாய் கொண்டு, ஜெபத்தோடும், பாரத்தோடும் வடமாநிலங்களில் சென்று செய்யும் பணியே மிஷன்பணி, தேவனின் காரியம் ஆகும். இந்தியாவின் இரட்சிக்கப்படாத கடைசிநபர் இரட்சிக்கப்படும் வரை தொடர்ந்து இப்பணியை மாதந்தோறும் அல்லது ஒரு சில மாதம் ஒரு முறை ஒவ்வொரு சபையும் செய்ய தேவ காரியமாய் தேவன் நம்மை பாரப்படுத்துவாராக! ரோம சாம்ராஜ்யத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் ஜெபத்தோடும், பாரத்தோடும், நேசத்தோடும், அதிக பிரயாசத்தோடும், தியாகத்தோடும் எருசலேம் துவங்கி சுற்றிலும் இல்லரிக்கம் தேசம்வரை அறிவித்து சுவிசேஷமயமாக்கினதுபோல இந்தியாவை சுவிசேஷ மயமாக்க அன்புடன் உங்களை தேவன் ஊக்கப்படுத்தி எழுப்புவாராக!

### 2. தேவனின் காரியமாய் யாரை அனுப்புவேன்

ஏசாயா 6:8-ன் படி தேவனின் இரண்டாவது சித்தம் என்ன? யாரை நான் அனுப்புவேன்? இந்தியாவின் இரட்சிப்பின் பணி, மிஷன் பணிக்கு யாரை நான் அனுப்புவேன்? அன்பு வாசகரே! உங்கள் பதில் என்ன? தேவனின் காரியமாய் தேவ வேலைக்கு தேவன் தேடும் மனிதன் அல்லது மனுஷி நீங்கள் என்பதை என்று தான் உணர போகிறீர்கள்?

கோடா கோடியான நமது தேச ஜனம் மீட்கப்பட அப்போஸ்தலனாகிய பவுல் தேவன் சந்தித்தபோது நான் என்ன செய்ய சித்தமாய் இருக்கிறீர் என்று கேட்டு, உணர்ந்து, அர்ப்பணித்து தாமதமின்றி கிறிஸ்து இரட்சகர் என்று இரட்சிப்பின் செய்தியை அறிவித்து ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கு பயன்பட்டதுபோல அர்ப்பணித்து நாமும் முதற்கனி பிள்ளைகளையும் அர்ப்பணித்து மிஷன் பணிக்கு

அனுப்புவோமா? (அப்.9:6;9:20,22). அப்போஸ்தலனாகிய பேதுருவும் தேவகாரியமாய் உடனே அர்ப்பணித்து மீன் பிடிக்கிறவனாகிய அவன் மனுஷனை பிடிக்கிறவனாய் மாறினானே? (லூக்கா 5:1-10). மூவாயிரம், ஐயாயிரம் என்று ஜனங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள தேவனின் காரியமாய் பேதுருவை பயன்படுத்தியதுபோல உங்களையும் பயன்படுத்துவார். நம்பி வருவீர்களா? அர்ப்பணிப்பீர்களா?

### 3. தேவ சத்தத்திற்கு கீழ்ப்படிதல்

ஏசாயா 6:8-யைப் பாருங்கள்! ஏசாயா தீர்க்கதரிசி தேவ சத்தத்தை கேட்டபோது யாராகிலும் பதில் கொடுக்கட்டும் என்று நினைக்கவில்லை! மாறாக என்னை அனுப்பும்! இதோ அடியேன் இருக்கிறேன்! என்றான். "பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே" விசேஷம். கீழ்ப்படிவீர்களா? நீங்கள் அல்லது உங்கள் குடும்பமாய் அழைப்பை ஏற்று வடமாநிலங்களுக்கு செல்ல முன்வருவீர்களா? தாமதம் வேண்டாம்; இன்றே அனுக்கிரக நாள், நேரம் என்று உணர்ந்து அர்ப்பணிப்போம்! இந்தியாவின் மீட்பிற்கு தேவன் உங்களை பயன்படுத்துவார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!.

### நமது தரிசனம் :

முதலாவது,

- ✓ நமது மிஷன் மாநிலங்களில் சபை இல்லாத மாநிலங்களில் சபையை ஆரம்பிப்பது.
- ✓ அனைத்து மாநில தலைநகரங்களிலும் சபை ஆரம்பிப்பது.
- ✓ பின்பு அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் சபை.
- ✓ பின்பு அனைத்து தாலுக்கா தலைநகரங்களிலும் சபை.
- ✓ பின்பு அனைத்து பேரூராட்சிகளிலும் சபை.
- ✓ பின்பு அனைத்து ஊராட்சிகளிலும் சபை.
- ✓ பின்பு அனைத்து பெரிய கிராமங்களிலும் சபை.
- ✓ பின்பு அனைத்து கிராமங்களிலும் சபை.

நமது திட்டமிடல்கள், ஜெபமுயற்சிகள், நிதி ஆதாரங்கள், மிஷனரிகளை அனுப்புதல், நிலம் வாங்குதல், ஆலயம் கட்டுதல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கண்ட இந்த ஒற்றை தரிசனத்துடனும், முக்கியத் துவத்துடனும் நடைபெறும்.

### நமது இலக்குகள் :

ஒவ்வொரு மண்டலமும் வருடத்திற்கு குறைந்தது.

- ❈ ஒரு புதிய மிஷனரியை தாங்குதல்.
- ❈ ஒரு புதிய மிஷனரியை அனுப்புதல்.
- ❈ ஒரு புதிய சபையைக் கட்டுதல்.
- ❈ ஒரு மிஷனரி பிரயாணம் செல்லுதல்.

ஜெபியுங்கள்! இணைந்து செயல்படுங்கள்! தேசத்தை இயேசுவுக்காக சுதந்தரிப்போமாக.




Rev. **Steve Asir**
(President - Christ's Ambassadors)

அன்பான கிறிஸ்துவின் ஸ்தானிகர் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். நம்மை பிறருக்கு வெளிச்சம் காண்பித்து பிரகாசிக்கிறவர்களாய் ஏற்படுத்தி வைத்திருக்கிற தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

பிரகாசிக்கும் விளக்கு என்கிற தலைப்பில் நாம் தியானித்து, அர்ப்பணித்து, செயல்பட்டு வருகிறோம். கடந்த இதழில் ஒரு விளக்கு தான் பிரகாசிக்கிற ஒளியை மற்றவர்களுக்கு பிரயோஜனமுள்ளதாக காணப்பட, அது தன் விளக்கு தண்டின் அடிப்பகுதியில் ஸ்திரமாக நிற்கத்தக்க சமமானதாகவும், உறுதியுள்ளதாகவும் காணப்பட வேண்டும் என்று தியானித்தோம். நம் வாழ்விலும் நாம் பிறருக்கு ஆசீர்வாதமாய் இருப்பதற்கு.

1. அடிப்படை சத்தியங்களில் உறுதியாய் இருப்பது முக்கியம்.
2. கர்த்தர் நம்மை ஏற்படுத்தின ஸ்தானத்தில் இருப்பது முக்கியம்.

இவ்விரண்டும் சரியாய் இருந்தால் நாம் பிரகாசித்து ஆசீர்வாதமாக இருப்போம் என்று பார்க்க தேவன் கிருபை தந்தார்

## சத்தியங்கள்

பிலிப்பியர் 2:14-16

14. நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள்.
15. கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்றபிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,
16. எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.

பிரகாசிக்க ஜீவ வசனத்தின் உபதேசம் நமக்கு தேவை. இந்த உபதேசமே நம்மை அசையாதவர்களாய் சமமாய் நிற்கச்செய்யும்.

## உபதேசத்தின் மேன்மை

**1.உணர்த்தும் உபதேசம் :**

ஏசாயா 28:9

9. அவர் யாருக்கு அறிவைப் போதிப்பார்? யாருக்கு உபதேசத்தை உணர்த்துவார்? பால்மறந்தவர்களுக்கும், முலை மறக்கப்பண்ணப்பட்டவர் களுக்குமே.

தாவீது பத்சேபாளிடம் பாவம் செய்ததை நாத்தான் தீர்க்கதரிசியின் மூலம் உணர்த்தி உபதேசம் செய்தபிறகு தாவீதின் விளக்கு ஒருபோதும் தள்ளாடாமல் உறுதியாய் நின்று பிரகாசிக்க உதவியாய் இருந்தது. உணர்ந்தும் உபதேசம் நம் தவறுகளை உணர்த்தி நம்மை உறுதிப்படுத்தும்.

**2. அறிவில் விருத்தியடையச்செய்யும் உபதேசம் :**

நீதிமொழிகள் 9:9

9. ஞானமுள்ளவனுக்குப் போதகம்பண்ணு, அவன் ஞானத்தில் தேறுவான்; நீதிமானுக்கு உபதேசம்பண்ணு. அவன் அறிவில் விருத்தியடைவான்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அறியாமல் எம்மா ஊருக்கு போய்கொண்டிருந்த சீஷர்களிடத்தில் இயேசு பேசி உபதேசித்து சென்று இறுதியில் அவர்கள் தங்குமிடத்தில் அவர்கள் கண்களை திறந்து அறிவடைய செய்தபோது தான் அவர் இயேசு என்ற அறிவடைந்தார்கள். நம் வாழ்வில் கர்த்தருடைய வார்த்தையே நம் கலக்கங்களில் இருந்து விடுதலை தந்து அறிவடைய செய்கிறது. அந்த அறிவே நம்மை பிரகாசிக்கச் செய்கின்றது.

**3. ஒப்புரவாக்குதலின் உபதேசம் :**

2 கொரிந்தியர் 5:19

19. அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.

பவுல் பிலமோனுக்கு உபதேசத்ததினால் ஒநேசிமு பிலமோன் ஒப்புரவாக்கப்பட்டார்கள். இந்த ஒப்புரவாக்குதல் தேசநாம மகிமைக்காக சாட்சியாய் பிரகாசிக்க உதவியது.

**4.ஆரோக்கியமான உபதேசம்:**

தீத்து 1:9

9. ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம்பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நான்றாய் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்.

தீத்து 2:1

1. நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு

தீமோத்தேயுவின் பாட்டியிடத்திலும் தாயினிடத்திலும் விசுவாசத்தின் ஆரோக்கியமான உபதேசம் நிலைத்திருந்து. அது தீமோத்தியுவின் வாழ்விலும் நிலையாக பிரகாசித்தது, நல்ல ஆரோக்கியமான உபதேசம் தலைமுறை தலைமுறையாய் நிலைத்திருந்து பிரகாசிக்கும்.

அன்பாக வாலிபரே! நாம் தேவனுடைய வார்த்தையாகிய உபதேசத்திற்கு நம்மை அர்பணிக்க வேதத்தை தவறாமல் வாசிப்போம். சபையோடு இணைந்திருப்போம். இக்கடைசி காலத்தில் உலகத்தில் உதிக்கின்ற நூதன உபதேசங்களுக்கு விலகி இருப்போம். கர்த்தர் நம்மையும் நிலையாய் பிரகாசிக்க செய்வார்.

தேவனுக்கே மகிமை!!

உங்களுக்குத் தெரியுமா?

## உலகம் முழுவதும்

- ஒரு நிமிடத்திற்கு 105 பேர் மரிக்கிறார்கள்.
- ஒரு நாளைக்கு 1,51,000 பேர் மரிக்கிறார்கள்.
- ஒரு ஆண்டில் 5 கோடியே 53 லட்சம் பேர் மரிக்கிறார்கள்.
- இதில் 6% மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாய் இருக்கிறார்கள்.
- ஒரு நிமிடத்திற்கு 9 விசுவாசிகளும் 147 அவிசுவாசிகளும் மரிக்கிறார்கள்.

ஒரு நிமிடத்திற்கு 80 பேர் இயேசு இல்லாமல்
நித்திய அழிவுக்குப் போகிறார்கள்

உங்கள் பங்கு என்ன?
நற்செய்தி அறிவிக்கப் பயிற்சி பெறுங்கள்! ஊழியம் செய்யுங்கள்

*Jesus said, "Go into all the world" (Mk 16:15)*
*The world begins where your frontyard ends*

## இந்தியாவின் இன்றைய தேவை

தேசத்தில் நடக்கின்ற அசம்பாவிதங்களும், வன்முறைகளும், ஊழல்களும் நம்மைவேதனைப்படுத்துகிறதாகவே இருக்கிறது. இவைகளெல்லாம் நம்முடைய தேசத்திற்காய் நாம் அதிகமாய் ஜெபிக்க வேண்டிய நம்முடைய கடமையை நினைவுப்படுத்துகிறது.

தேசத்தின் ஷேமத்திற்கு நமது ஜெபம் மிக அவசியம் (2நாளா.7:14). ‘‘விசுவாசிகளின் ஜெபத்தை கொண்டே தேவன் உலகை (இந்தியாவை) ஒழுங்குபடுத்துகிறார் என்பது அநேக திருச்சபைகளுக்கு தெரியாது. தெரிந்திருந்தால் அவர்கள் ஒருபோதும் ஜெபத்தை உதாசீனம் செய்யமாட்டார்கள்" என்றார் ஆண்ட்ரூ மூரே.

தேசம் (இந்தியா) பாழாக்கப்படுகின்ற முகாந்திரத்தை அறிந்து (எரே.9:12), தேசம் அழிக்கப்படாதபடி திறப்பிலே நிற்கும் மனிதனை தேவன் தேடுகின்றார் (எசே. 22:30).



1. ஜனங்களின் இரட்சிப்புக்காய் கர்ப்ப வேதனைப்படும் பவுல்கள் (கலா.4:19).
2. விக்கிரகங்களுக்கு எதிராய் எழும்பி நிற்கும் கிதியோன்கள்! (நியா.6:27).
3. மெய்யான தேவனை நிரூபித்து காட்டும் எலியாக்கள்! (1 இராஜா. 18:36,39).
4. தேசத்தை சுவிசேஷமயமாக்கும் பிலிப்புகள்! (அப்.8:5,6,14).
5. தேவ வார்த்தையை வெளிப்படுத்தும் அகபுகள்! (அப்.11:28).
6. ஜனங்களை காக்கப்படும்படி உபவாசிக்கும் எஸ்தர்கள்! (எஸ்தர் 4:16).
7. பாழான கிராமங்களுக்காய் பரிந்துபேசும் தெபொராள்கள்! (நியா.5:7).

# நமது வாயை எப்பொழுது திறக்கக்கூடாது?



1. கோபத்தின் உச்சியில் இருக்கும்போது (நீதி.14:17)
2. எல்லா உண்மைகளும் தெரியாதிருக்கும் போது (நீதி.18:13).
3. காரியத்தை சரியாக, ஆராய்ந்து பார்ப்பதற்கு முன் (உபா.17:6).
4. உங்கள் வார்த்தைகள் பலவீனமான சகோதரனுக்கு இடறல் உண்டாக்கு மானால் (1கொரி.8:11).
5. கேட்க, கவனிக்க வேண்டிய வேளையாக இருக்கும்போது (நீதி.13:1).
6. பரிசுத்தமான காரியங்களை அற்பமாக எண்ணி பேச சோதிக்கப்படும்போது (பிரசங்கி 5:2).
7. பாவத்தைக் குறித்து கேலியாக பேச சோதிக்கப்படும்போது (நீதி.14:9).
8. உங்கள் வார்த்தைகளைக் குறித்து பின்பு வெட்கப்பட வேண்டியதிருக்குமானால் (நீதி.8:8).
9. உங்கள் வார்த்தைகள் தவறான எண்ணத்தை மற்றவர்கள் மனதில் பதிய செய்யுமானால் (நீதி.17:27).
10. நீங்கள் பேசப்போகும் காரியம் உங்களுக்கு சம்பந்தமில்லாமல் இருக்கும்போது (நீதி.14:10).
11. நீங்கள் துணிகரமாக பொய்பேச சோதிக்கப்படும்போது (நீதி.4:24).
12. உங்கள் வார்த்தைகள் மற்றவர்களின் நற்பெயருக்கு கலங்கம் உண்டாக்குமானால் (நீதி.16:27).
13. உங்கள் வார்த்தைகள் நட்புகளை பாதிக்குமானால் (நீதி.16:28).
14. மற்றவர்களை குறைசொல்ல ஏவப்படும்போது (யாக்.3:9;4:11).
15. சத்தத்தை உயர்த்தி கத்தி பேச உந்தப்படும்போது (நீதி.25:28).
16. கர்த்தரை அல்லது நீங்கள் குடும்பத்தை, உங்கள் வார்த்தைகள் தவறாக பிரதிபலிக்குமென்றால் (1பேதுரு 2:21-23).
17. நீங்கள் பேசும் வார்த்தைகளைக் குறித்து நீங்கள் பின்பு வருத்தப்பட வேண்டியிருக்குமானால் (நீதி.18:21).
18. நீங்கள் அதை ஏற்கனவே ஒன்றிக்கும் மேல் பல முறை சொல்லியிருந்தால் (நீதி.19:13).
19. நீங்கள் துன்மார்க்கக்கனை முகஸ்துதி செய்ய சோதிக்கப்படும்போது (நீதி.24:24).
20. நீங்கள் வேலை செய்யவேண்டிய நேரத்தில், அதை செய்யாமல் பேச தூண்டப்படும்போது (நீதி.14:23).

**“தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்” (நீதி.21:23).**



# இரட்சிப்பைக் காத்துக்கொள்

Rev.K. ராஜா
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்

...முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் (மத்.24:13)

...இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருப்போமானால், தண்டனைக்கு எப்படி தப்பித்துக்கொள்வோம் (எபி.2:4).

... உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் (பிலிப்பியர் 2:12).

ஆவிக்குரிய வாழ்வின் அஸ்திபாரமாகிய இரட்சிப்பையும், அதன் நிச்சயத்தையும் காத்துக்கொள்வது மிக முக்கியம். அதைக்குறித்துக் கற்றுக் கொள்வோம்

**இரட்சிப்பு என்றால் என்ன? WHAT IS SALVATION?**

பாவத்திலிருந்து விடுபட்டு (அ) மனந்திரும்பி இயேசுவின் இரத்தத்தால் மன்னிக்கப்பட்டு, தேவனோடு இணைக்கப்பட்டிருக்கிற நிச்சயத்தை பெற்ற அனுபவமே இரட்சிப்பு ஆகும்.

- லூக்கா 19:8,9-சகேயு தன் பொல்லாத செய்கைகளிலிருந்து மனந்திரும்பி, தேவனோடு தன்னை இணைத்துக் கொண்டான்.
- லூக்கா 15:21-24-இளையகுமாரன் தன் பாவத்தை உணர்ந்து, அறிக்கைசெய்து மனந்திரும்பி தன் தகப்பனோடு இணைந்து கொண்டான்.
- அப்.2:40-42-பெந்தெகொஸ்தே நாளன்று தேவனுடைய வார்த்தையை கேட்ட மக்கள், மாறுபாடான நிலையிலிருந்து விலகி, தங்களை தேவனோடும், தேவ ஜனங்களோடும் இணைத்துக் கொண்டார்கள்.

**இரட்சிப்பின் மேன்மை: (GREATNESS OF SALVATION)**

- லூக்கா 15:24 - என் பாவங்கள் மன்னிக்கப்பட்ட சந்தோஷம்.
- 1 யோவான் 3:1, ரோமர் 8:16 - நான் தேவனுடைய பிள்ளை என்ற நிச்சயம்.
- 1பேதுரு 5:10 - நான் நித்திய ஜீவனை சுதந்தரிப்பேன் என்ற நம்பிக்கை.

**இரட்சிப்பின் கிரயம்: (COST OF SALVATION)**

- யோ 3:16,17 - நம் மேல் வைத்த அன்பினாலே, தேவன் மனிதனானார்.
- 1 கொரி. 15:3.4 - நம்மை மீட்க தேவன் அடிக்கப்பட்டு, இரத்தம் சிந்தினார்.

**இரட்சிப்பை ஏன் காத்துக்கொள்ள வேண்டும்? WHY DO WE KEEP SALVATION?**

- எபே. 2:8 - இரட்சிப்பு தேவனுடைய ஈவு (அ) பரிசு.
- மாற்கு 13:22 - தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கிற உலகம்.
- 1 பேதுரு 4:17,18-தேவனுடைய நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும்.

**இரட்சிப்பைக் காத்துக் கொள்ள: TO KEEP SALVATION**

**1. சபையோடு இணைந்து கொள்ள வேண்டும் (அப். 2:47)**

- இயேசு இரத்தம் சிந்தி சம்பாதித்த சபை.

- இரட்சிக்கப்படுகிறவர்களை சபையில்தான் தேவன் சேர்த்தார்.
- சபையோடு இருக்கிற ஐக்கியம் மிக முக்கியம். சபை ஆராதனை, ஜெபம் போன்ற அனைத்துக் காரியங்களிலும் உற்சாகமாய் பங்குபெற வேண்டும்.
- சபைதான் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**2. ஞானஸ்நான உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிய வேண்டும் (அப்.2:41).**

- இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக் கொண்டவர்கள், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் மூழ்கி ஞானஸ்நானம் பெற வேண்டும் (மத்.28:19-20).
- ஞானஸ்நானம் என்பது தேவனோடு செய்யும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாகும் (1பேதுரு 3:21).

**3. பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற வேண்டும் (அப்.1:8; 8:16;17, 9:17; ரோமர் 8:16)**

- கடை கால சவால்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மை ஆவியானவர் பெலப்படுத்துவார்.
- நாம் தேவனுடைய பிள்ளை என்ற நிச்சயத்தைத் தருகின்றவர், வழி நடத்துகிறவர்.

**4. தேவ வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும் (அப்போஸ்தலர்2:41, 17:11)**

- தேவனுடைய வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமத்தை ஏற்றுக்கொண்டு, தினந்தோறும் வாசிக்க வேண்டும்.
- தேவ வார்த்தையை உற்சாகமாக கேட்க வேண்டும். தியானிக்க வேண்டும். காரணம், தேவ வார்த்தை நம்முடைய கால்களுக்குத் தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்.119:105).

**5. மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுக்க வேண்டும் (லூக்கா 3:8:14)**

- மனந்திரும்பி தேவ பிள்ளைகளாக வாழ்பவர்கள் ஆவிக்குரிய கனிகளை வெளிப்படுத்த வேண்டும்.
- கஷ்டப்படுகிறவர்களுக்கு அன்பினாலே உதவி செய்யுங்கள்.
- எல்லாரோடும் சமாதானமாய் இருங்கள்.
- மற்றவர்களைப் போல இல்லை என்று வருத்தப்படாமல், உங்களை தேவன் ஆசீர்வதித்திருப்பதில் சந்தோஷமாயிருங்கள்.

**6. இயேசுவை நோக்கி ஓட வேண்டும் (எபி. 12:1)**

- நம்மைச் சுற்றி வரும் அத்தனை பாவ சோதனைகளையும், அழுத்தங்களையும் உதறித் தள்ளி விடவேண்டும்.
- அழைத்த, இரட்சித்த இயேசுவை நோக்கி, தேவன் நமக்குத் தந்திருக்கிற வாழ்க்கை முறையில் ஓடவேண்டும்.

சவால் நிறைந்த இந்த உலகத்தில் நம்முடைய இரட்சிப்பில் கடைசி வரை நிலைத்து நின்று நித்திய ஜீவனை சுதந்தரிக்க தேவன் பெலன் தருவாராக. ஆமென்.



# தலைமைத்துவம்

## (Leadership)

Dr. L. ஜெயபாலன்
முன்னாள் முதல்வர், தமிழ்நாடு வேதாகம கல்லூரி

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் குழந்தையாகப் பிறந்து தாயினால் பாலூட்டி வளர்க்கப்பட்டு, பேசக் கற்றுக்கொண்டு நாளடைவில் தனக்கே ஒரு தலைவனாக வாழ கற்றுக்கொள்கின்றனர். தனது நேரத்தை சரிவர உபயோகப்படுத்தக் கற்றுக்கொண்டு, பிறருடன் சுமுகமாக வாழக்கற்றுக்கொண்டு தனது பேச்சால், திறமையால் எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளின் தயவால் தலைவனாக மாறுகின்றனர். குறுக்கு வழியில் வருகிறவர்களும் உண்டு. இப்படிப்பட்டவர்கள் மூலம் மக்கள் பல இன்னல்களை சந்திப்பார்கள். தேவநாமம் தூஷிக்கப்படும். ஒரு நல்ல தலைவன் காரியங்களை திட்டமிட்டு செய்யப்படுவான்.

### திட்டமிடுதல்: (PLANNING)

“நீ திட்டமிட தவறினால், தவறுவதற்கு திட்டமிடுகிறாய்; "If you fail to plan, you plan to fail" என கல்லூரியில் படித்ததுண்டு. ஒரு காரியத்தை செய்கையில் பல காரியங்களை நினைத்து, திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

- என்ன செய்யப்பட வேண்டும்?
- நான் என்ன செய்ய வேண்டும்?
- நான் எப்படி செய்ய வேண்டும்?
- நான் எப்பொழுது செய்யவேண்டும்?
- எவ்வளவு பணம் அவசியம்? (தேவைப்படும்)
- யாரை எல்லாம் உபயோகப்படுத்த வேண்டும்?

திட்டமிடுவதில் ஒருவர் தனது அலுவலகத்தில் திட்டமிடும் காலண்டர் வைத்திருக்க வேண்டும் (Planning Calender). ஒரு சிறு காலண்டரை கையில் வைத்திருக்க வேண்டும். அனுதின வேலைகளையும், எந்த நாட்களில் என்பதையும் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு சிறு நோட்டையும் வைத்திருக்க வேண்டும். அதில் கடைக்குச் சென்றால் எவைகளை வாங்க வேண்டும் என்பவைகள் இடம் பெறலாம். இதனால் நேரம் ஆதாயப்படும்.

### நேரம்: (TIME)

ஒவ்வொருவருக்கும் நேரம் மிகவும் இன்றியமையாதது. பிரதமர் முதற்கொண்டு பாட்டாளி வரைக்கும் 24மணி நேரமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் நேரத்தை எப்படி செலவழிக்கிறோம் என்பதே மிக முக்கியமானது எனது. இளமை பிராயத்தில் விளையாட்டிற்கும், பொழுது போக்கிற்கும், கதைப் புத்தகங்களை படிப்பதற்கும் நேரத்தை செலவழித்தேன். “காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில் கண்ணீர் விடுவாயே” என எனது அருமை தாயார் பாடுவதுண்டு 1962-64வரை எனது தாத்தாவுடன் இருக்கையில் நேரத்தின் முக்கியத்துவத்தை கற்றுக்கொண்டேன். “காலம் ஒரு பொக்கிஷம் அதை வீணாக்காதே” என்றார் ஒருவர். “காலமும் வேளையும் யாருக்கும் காத்திருக்காது” என்றார் இன்னொருவர்.

## ஆட்களை தெரிந்தெடுத்தல் : (Choosing the people)

ஒரு குறிப்பிட்ட வேலையை செய்ய தகுதியான நபர்களை தெரிந்தெடுக்க ஜெபிக்க வேண்டும். ஆட்களை சோதனை அடிப்படையில் தெரிந்தெடுத்து, என்ன செய்ய வேண்டும் என்பதை சொல்ல வேண்டும். சிலருக்கு தலைமைத்துவ பண்புகள் அவர்களில் காணப்படும். மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுத்தால் கற்றுக்கொள்வார்கள்". "தனது வேலையில் அசதியாயிராதவன் நீசர்களுக்கு முன்பாக நில்லாமல் இராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்" என வேதாகமம் கூறுகிறது. தலைவனாக இருக்கிறவன் ஒரு வேலையை தானும் செய்ய வேண்டும். பிறரையும் செய்ய வைக்க வேண்டும். ஒரு இடத்தில் மரக்கட்டைகளை எடுத்து அடுக்கிக்கொண்டிருந்தனர். மேற்பார்வையாளர் கைகளை இடுப்பில் வைத்துக்கொண்டு "இப்படி வை, அப்படி வை" என்றார்.

அத்தருணத்தில் குதிரையில் வந்த ஒருவர் அந்த வேலையாட்களுடன் சேர்ந்து உதவி செய்தார். இதைக்கண்ட மேற்பார்வையாளர் உங்களை பிரதமரிடம் சிபாரிசு செய்கின்றேன். உங்கள் பெயர் என்ன என்றார் "ஜார்ஜ் வாஷிங்டன்" என்றவுடன் அதிர்ச்சியடைந்தார் மேற்பார்வையாளர். ஏனெனில் "ஜார்ஜ் வாஷிங்டன்" தான் அமெரிக்காவின் பிரதமராக இருந்தார்.

## நேர்மறையாக இருங்கள் : (Be Positive)

நேர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுங்கள் எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து விடுங்கள். ஒரு காரியத்தை செய்யும் முன் முடிவுக்கு வந்துவிடாதீர்கள். "குறிப்பிட்ட காலத்திற்கு தரிசனம் வைக்கப்பட்டுள்ளது. இது தாமதித்தாலும் அது நிச்சயம் நிறைவேறும்" பைபிள். இங்கிலாந்தின் தலைவராக இருந்த சர்ச்ஹில் என்பவர், மாணவர்களில் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் "Never Ever give up" என்று சொல்லி தனது ஆசனத்தில் அமர்ந்தார். "ஒருபொழுதும் விட்டுவிடாதே" என்பதாகும். அவரது சொற்பொழிவு மிகச் சிறியது. அது மிகப்பெரிய தாக்கத்தை மாணவர்கள் மத்தியில் உருவாக்கிற்று.

## நம்பிக்கையோடு செயல்படுதல், (நேர்மறையாக செயல்பட நம்பிக்கை)

மிகப்பெரிய காரியங்களை சாதிக்க எளிமையான விசுவாசம் போதும், இயேசு தனது போதனையில், "கடுகளவு விசுவாசம் இருந்தால்" என கூறினார். ஒரு உருளைக்கிழங்கு கடுகைக் காட்டிலும் பல மடங்கு பெரிதாக இருக்கும், அந்த கிழங்கை பல நாட்கள் அப்படியே வைத்திருந்தால், அது சிறியதாக சுருங்கி விடும். ஏனெனில் அதில் வெற்றிடம் இருக்கும். ஒரு கடுகில் வெற்றிடம் கிடையாது. எனவே தான் நமது விசுவாசம் சிறிதாக இருந்தாலும், அது குறைவற்றதாக இருக்க வேண்டும்.

## தளராத மனம் : (Unwavering mind)

இரு மனமுள்ளவன் தனது செயல்களில் நிலையற்றவனாக இருக்கிறான்.

## என்ன வந்தாலும் அதை சந்திக்க ஆயத்தமாயிருங்கள் : (Be Ready to face the worst)

உலகத்தில் பெரிய விஞ்ஞானிகள், தலைவர்கள் பல போராட்டங்களை சந்தித்து நம்பிக்கையை இழந்துவிடாமல் இறுதியில் வெற்றி பெற்றனர் என்பதை வரலாறு எடுத்து இயம்புகிறது. தாமதித்தால் அல்லது முதன் முயற்சியில் இலக்கை அடையா விட்டால் சோர்ந்து போகவே கூடாது.

sறுவர் பகுதி



# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


**பாஸ்டர். பெவிஸ்டன்**

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ்.. எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? பரிபூரண ஜீவன் சிறுவர் பகுதிக்கு நீங்கள் கொடுத்துவரும் மேலான ஆதரவை உங்கள் கருத்துக்கள் மூலம் அறிந்து தேவனை துதிக்கிறேன். புதிய கல்வியாண்டில் ஜெபத்துடன் அடியெடுத்து வைத்துள்ள உங்களை மனதார பாராட்டுகிறேன். புதிய கல்வியாண்டில் புதிய உற்சாகத்தோடும், புதிய தீர்மானங்களோடும், புதிய திட்டங்களோடும் தேவ கிருபை பெற்று மேன்மேலும் வளரவும் உயரவும் வாழ்த்துக்கள். கதை கேட்க ஆர்வமாயிருக்கிறீங்களா? வாங்க கதைக்குள்ளே போகலாம்.

தன் தந்தையினுடைய மரணத்திற்குப் பின், தன் தாயை அழைத்துச்சென்று ஆதரவற்றோர் இல்லத்தில் சேர்த்தான் ஒரு மகன். அவ்வப்போது நேரம் கிடைக்கும் சமயத்தில் தன்னுடைய தாயை பார்க்க வந்துசெல்வான். ஒருமுறை அந்த தாய் மரிக்கும் தருவாயில் இருப்பதாக, ஆதரவற்றோர் இல்லத்திலிருந்து மகனுக்கு செய்தி அனுப்பப்பட்டது. மகனும் ஓடோடி வந்து ஏதேனும் கடைசி ஆசை இருக்கிறதா என தாயிடம் விசாரித்தான்.

தாய் தன் மகனிடம், தழுதழும்பிய குரலில் “இந்த காப்பகத்திற்கு ஒரு நல்ல மின்விசிறி வாங்கிக் கொடுப்பா…” என்று வேண்டிக்கொண்டாள். மகன் கண்ணீருடன், ‘உங்களை காணவரும்போதெல்லாம் நீங்கள் இந்த உதவியை கேட்கவில்லை. இன்னும் சற்று நேரத்தில் நீங்கள் மரித்துவிடுவீர்கள், இதைத்தவிர வேறு ஆசை இல்லையா? என கேட்டான். அப்போது தாய் மகனிடம், ‘மகனே என்னால் இங்குள்ள வெப்பத்தை சமாளிக்க முடிந்தது. உன்னை உனது மகன் இங்கு அனுப்பும்போது, உன்னால் இந்த வெப்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியாது என கண்கலங்க பரிவாக கூறி உயிரை விட்டாள்.

தம்பி தங்காய், இச்சம்பவத்தை உங்களால் கற்பனைச் செய்ய முடிகிறதா? இதனை ஒரு குறுநாடகமாக பதிவு செய்தால் சிறப்பாக இருக்கும். நாம் எதை விதைக்கிறோமோ அதைத் தான் அறுப்போம். தக்காளி விதையை விதைத்தவன் பப்பாளி பழத்தை அறுவடை செய்ய முடியாது. நமது இன்றைய எண்ணங்களும், செயல்பாடுகளும் தான் எதிர்கால வாழ்வை நிர்ணயம் செய்கிறது என்றால் மிகையாகாது.

நமது தாய் தகப்பனை அலட்சியம் பண்ணுதல் பாவம் மட்டுமல்ல, நமது ஆயுள் காலத்தையும் குறைத்துவிடும். எனவே தான், “உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக” (யாத்.20:12) என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக (உபா.5:16) என்றும் பரிசுத்த வேதாகமம் எச்சரிக்கிறது.

இக்கால மாணவர்கள் பலர் தங்கள் தாய் தப்பனை அறிவில்லாதவர்கள் என்றும், அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்றும் கூறி பெற்றோரை அவமதிக்கின்றனர். தனது அப்பா அம்மாவை ஏங்க வைத்துவிட்டு, அவர்களிடம் நேரம் செலவிடுவதை அலட்சிப்படுத்திவிட்டு, தனது நண்பர்களின் பெற்றோரை அப்பா அம்மா என வாய்விட்டு கூறி நடிக்கும் மாணவர்களுக்கும் இக்காலத்தில் பஞ்சமில்லை. நான் ஏன் இந்த குடும்பத்தில் பிறந்தேன்? என அடுக்கடுக்காக கேட்கும் கேள்விகளும் அதிகரித்து வருகிறது.

தம்பி தங்காய், உலக தோற்றத்திற்கு முன்னே உன்னை அறிந்தவர் நீ எந்த குடும்பத்தில் பிறக்க வேண்டும் என்பதில் தவறு செய்து விடுவாரோ? நிச்சயமாக இல்லை. ஆகவே உன் தாயையும், தகப்பனையும் மனப்பூர்வமாக நேசித்து, அவர்களை கனம்பண்ணுங்கள். அவர்களது நல்வார்த்தைகள் மற்றும் ஆலோசனைகளை காது கொடுத்து கேளுங்கள். அவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்கியிருங்கள். சர்வ உலகையும் படைத்து ஆளுகை செய்யும் அதிகாரம் பெற்ற இயேசு கிறிஸ்து, தனது மேன்மைக்குரியவைகளை குறித்து பெருமைபாராட்டாமல் தனது 30 ஆம் வயது வரை கீழ்ப்படிந்து அடங்கியிருந்ததையும், தனது சரீரபிகாரமான வாழ்வின் இறுதி நேரத்தில் கோர சிலுவையில் தொங்கியபடியே தனது தாய்க்கு செய்ய வேண்டிய கடமைகளையும் செய்து முடித்ததை காண்கிறோம். ஆகவே, தம்பி தங்காய்... உங்களது பிரகாசமான வாழ்வின் மூலதனத்தை நல்ல குணநலன்களுடன் துவக்குங்கள். இதுவே காலத்தின் சிறப்பு.

மனன வசனங்கள்:

பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது (எபே. 6:1-3).

இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 9750381784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் மற்றொரு சிறுகதையுடன் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...

---

## கோலியாத்தும் சவுலும்

தாவீதிற்கு இரண்டு விதமான எதிரிகள் இருந்தனர். நாமும் நம்முடைய வாழ்வில் இரண்டு விதமான பிரச்சனைகளை சவால்களை சந்திக்க நேரிடும்.

**1. கோலியாத்** : கோலியாத் என்ற எதிரியை தாவீது ஒரே நாளில் முறியடித்தான். நம்முடைய வாழ்விலும் சில பிரச்சனைகளுக்கு, சவால்களுக்கு உடனடியாக தீர்வு, உடனடியாக அற்புதம் கிடைக்கும். காரியங்கள் துரிதமாக நடக்கும். அற்புதங்கள் எளிதில் நடக்கும்.

**2. சவுல்** : நம்முடைய வாழ்க்கையில் சில பிரச்சனைகளுக்கு, சவால்களுக்கு உடனடியான தீர்வு கிடைக்காமல் பல வருடங்களாக போராடி வருவோம். சில நேரங்களில் அந்த பிரச்சனையை எதிர்த்து போராடுவதற்கு பதில் அந்த பிரச்சனையுடன் வாழ பழகிக்கொள்வோம். அந்த பிரச்சனையில் ஒரு அற்புதத்தை எதிர்பார்த்து சோர்ந்து போய்விடுவோம்.

நற்செய்தி என்னவெனில் சவுலும் ஒருநாள் வீழ்த்தப்படுவான்.

பிரச்சனைகளில் ஏன் இந்த வித்தியாசம்?

கோலியாத் போன்ற பிரச்சனைகள் நம்மை **உயர்த்துவதற்கு!**

சவுல் போன்ற பிரச்சனைகள் நம்மை **உருவாக்குவதற்கு!!**



# நீங்கள் ஒரு சிறந்த பெற்றோரா?

## Effective Parenting

Rev. பெகின் சாமுவேல்
இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

கிறிஸ்துவுக்குள் பிரியமான அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த இதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தேவனுடைய பெரிதான கிருபையால் இந்த வருட AGVBS ஊழியங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதற்காக ஒத்துழைத்த ஜெபித்த உங்கள் அனைவருக்கும் என் நன்றியை AGCM ஊழியங்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். புதிய கல்வியாண்டுக்குள் சென்றிருக்கும் ஒவ்வொரு மாணவர்களுக்கும் வாழ்த்துதலைத் தெரிவிக்கிறேன். இந்த இதழிலும் கல்வியாண்டின் துவக்கத்திலேயே எவ்வாறு ஒரு சிறந்த பெற்றோராக இருக்க முடியும் என்பதை ஜெபத்துடன் சற்று தியானிப்போம்.

### 1.Be positive

பிள்ளைகளை பெற்றோர்கள் அற்பமாக எண்ணாதீர்கள், பேசாதீர்கள். மற்ற பிள்ளைகளோடு அவர்களை ஒப்பிடுவது, மற்றவர்களிடம் அவர்களுடைய குறைகளை சொல்லுவது அவர்களை தன்னம்பிக்கை இழக்க செய்யும். எத்தனை தடவை உங்கள் பிள்ளைகளிடம் எதிர்மறையாக நடந்திருக்கிறீர்கள் என்று சிந்தித்துப் பாருங்கள். அவர்களை எத்தனை முறை தவறான வார்த்தைகளால் மனம் புண்படுத்தியிருக்கிறீர்கள். அதற்குப் பதிலாக அவர்களோடு நீங்கள் உட்கார்ந்து அன்பாய் பேசும் சில வார்த்தைகளும், அணைக்கும் தருணங்களும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும். பிள்ளைகள் தேவனால் நமக்கு அருளப்பட்ட பொக்கிஷங்கள். அதை மறந்து அவர்களைக் குறித்து முறுமுறுப்பது, சாபமான வார்த்தைகளை பேசுவதுகூடாது. அதை தேவன் விரும்புவதில்லை.

### 2. Make time for your kids

சில குடும்பங்களில் வாரத்திற்கு ஒரு நாள் கூட பிள்ளைகளோடு அமர்ந்து சாப்பிடுவது, பேசுவது கிடையாது. வேலை என்று பிஸியாக இருக்கும் நீங்கள் உங்கள் வேலைகளை கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு அல்லது சீக்கிரமாக முடித்துவிட்டு பிள்ளைகளுடன் உட்கார்ந்து பேச, விளையாட, சாப்பிட நேரத்தை ஒதுக்குங்கள். மாதத்திற்கு ஒருமுறை வெளியே எங்கேயாவது அழைத்துச் செல்லுங்கள். அவர்கள் பள்ளி, கல்லூரிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள தவறாதீர்கள். அவர்களுக்காக நீங்கள் செய்யும் சிறு சிறு விஷயங்களும் அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

### 3. Be flexible

அநேக காரியங்களை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மேல் திணிக்கிறதை பார்க்க முடிகிறது. தங்கள் விருப்பத்தையெல்லாம் பிள்ளைகள் செய்ய வேண்டும் என்று நினைத்து அவர்கள் தகுதிக்கு மிஞ்சினவைகளை எதிர்பார்க்காதீர்கள். அது மிகவும் தவறு. அவர்கள் விருப்பத்திற்கேற்ற காரியங்களை செய்ய கொஞ்சம் இடமளியுங்கள். என் பெற்றோர்கள் இப்படித்தான் என்னை வளர்த்தார்கள். நானும் அப்படித்தான் என்று அடம்பிடிக்காதீர்கள். நீங்கள் வாழ்ந்த காலம், மனநிலை, சூழ்நிலைகள் வேறு. அதற்கேற்றவாறு நீங்களும் மாறித்தான்

ஆக வேண்டும். பிள்ளைளுக்கு பேசி புரிய வையுங்கள். அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

**4. Be spiritual**

அநேக பெற்றோர்கள் ஆவிக்குரிய வாழ்வில் பிள்ளைகள் சரியாக இருக்க நினைப்பார்கள். ஆனால் இவர்கள் சரியாக ஆராதனைக்கு வருவது கிடையாது. வேத வாசிப்பு ஒழுங்காக இருக்காது. நாம் செய்யாத ஒன்றை பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பது தவறு. நீங்கள் பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய காரியங்களில் முன்மாதிரியாக இருக்க வேண்டும். அவர்கள் முன்பாக ஜெபியுங்கள். வேதம் வாசியுங்கள். அவர்களோடு இணைந்து ஆலயத்திற்கு செல்லுங்கள். தேவன் உங்கள் பிள்ளைகளையும், உங்களையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

## பெற்றோர்களே, எச்சரிக்கை!

நம்மில் அநேகர் கிறிஸ்தவ பெற்றோர்களாய் நமது பொறுப்பில் தவறுவது, வேண்டுமென்றே அப்படி தவறிப்போக தெரிந்து கொள்வதால் அல்ல, அநேக அலுவல்களில் சிக்கிக்கொண்டு அக்கறையற்றவர்களாய் மாறிவிட்டதால் தான், நம்முடைய பிள்ளை வளர்ப்பில் ஏதோ தவறு இருக்கிறது என்று சுட்டிக்காட்டும் எச்சரிக்கைகளை நாம் காணத் தவறியதால் தான்.

கீழ்க்காணும் பதினெட்டு எச்சரிக்கை குறிப்புகளை திறந்த மனதோடு ஆராய்ந்து பாருங்கள் :

1. உங்கள் பிள்ளைக்கு நீங்கள் ஒருமுறைக்கு மேல் சொல்ல வேண்டியிருக்கிறதா (அ) தூங்கச் செல்வதற்கு (ஆ) சபையில் அமைதியாயிருக்க (இ) அழுகையை நிறுத்த (ஈ) ஒரு வேலையை முடிக்க?
2. நீங்களோ அல்லது வேறொரு பெரியவரோ பேசும்போது உடனடியாகவும், மரியாதையுடனும் பதில் கூற உங்கள் பிள்ளை தவறுகிறதா?
3. எப்படியாகிலும் சில சமயங்களில் கீழ்ப்படியாமல் காரியம் சாதித்து விடலாம் என்று உங்கள் பிள்ளை நினைக்கிறதா?
4. "மன்னித்து விடுங்கள் நான் தவறு செய்துவிட்டேன்" என்று உங்கள் பிள்ளை சொல்ல நீங்கள் கற்பிக்க தவறிவிட்டீர்களா?
5. தன்னுடைய வழியில் செல்ல அனுமதிக்கப்படாதபோது பிடிவாதமான, விடாப்பிடியான மௌனத்தில் தனித்துச் செல்ல விட்டீர்களா?
6. பிறரது உரிமைகளுக்கும், உடைமைகளுக்கும் மதிப்புக்கொடுக்கும் குணத்தை உங்கள் பிள்ளையில் உருவாக்க தவறிவீட்டீர்களா?
7. என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் கூறும்போது... உங்கள் பிள்ளை அதை எதிர்த்து வாதாட அனுமதிக்கிறீர்களா?
8. இயல்பாகவே உங்கள் குழந்தை எதற்கெடுத்தாலும் சிணுங்கக் கொண்டே குறைகூறிக்கொண்டே இருக்கிறதா?
9. வீட்டில் இருப்பதைக் காட்டிலும் மற்ற எல்லா இடங்களிலும் இருப்பதை உங்கள் பிள்ளை அதிகம் விரும்புகிறதா?
10. நீங்கள் முக்கியமாக கருதுகிற காரியங்களைக் குறித்து உங்கள் பிள்ளை எள்ளி நகையாடுகிறதா?
11. உங்கள் பிள்ளை தன்னுடைய கனவுகளையும், திட்டங்களையும்

உங்களிடம் எப்பொழுதாவது பகிர்ந்துகொள்கிறதா அல்லது ஒருபோதும் அப்படி கலந்துரையாடுவது இல்லையா?

12. வாலிப பருவத்தில் உள்ள உங்கள் பிள்ளை உங்களது மதிப்பீடுகளுக்கு அக்கறையற்றவனாய் எல்லா தெரிவுகளையும் தானே செய்கிறானா?

13. உங்கள் பிள்ளைகள், வீட்டிற்கு செய்யும் உதவிகளிலும் வேலைகளிலும் ஏனேதானோவென்று இருக்கிறார்களா?

14. உலகப் பிரகாசமாக வளர்க்கப்படும் பிள்ளைகள் வீட்டிற்கு வந்துவிடும் நேரத்தை காட்டிலும் உங்கள் பிள்ளைகள் தாமதமாக வர அனுமதிக்கிறீர்களா?

15. உங்கள் பிள்ளைகள் வார்த்தையை நம்ப முடியவில்லையென்று உணருகிறீர்களா?

16. கிறிஸ்தவ ஐக்கியம் மற்றும் நடவடிக்கைகளைத் தவிர்த்து பிற கிறிஸ்தவரல்லாத நண்பர்கள் மற்றும் சபை சார்பற்ற நடவடிக்கைகளில் உங்கள் பிள்ளை நாட்டாங்கொள்கிறானா?

17. வீட்டிற்கு வெளியே எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ள உங்கள் பிள்ளை துணிவுகொள்ளும்போது, ஆசிரியர், போலீஸ் அதிகாரி, முதலாளி ஆகியோர் அவனை தண்டிக்கையில், அவர்கள்தான் உங்கள் பிள்ளையை தவறாக நடத்துகின்றனர் என எண்ணங்கொள்கிறீர்களா?

18. வேதம் கூறும் தகுதியான உடையலங்காரத்ததிற்கான வரையறைகளை மீறி ஆடைகளைத் தெரிவுசெய்ய உங்கள் பிள்ளையை அனுமதிக்கிறீர்களா?

இக்கேள்விகளில் சிலவற்றுக்கு நீங்கள் "**ஆம்**" என்று பதிலளிக்க வேண்டியிருந்தால், காரியங்களைத் திருத்திக்கொள்ள தேவனிடம் மன்றாடுங்கள்.

---

**A MAN WHO SAYS HE IS A FOLLOWER OF JESUS, AND IS NOT A FISHER OF MAN IS A LIAR (Mark 1:17)**

**இயேசுவை பின்பற்றுகிறேன் என்று சொல்லியும் மனிதர்களை பிடிக்கிறவனாய் இல்லாவிட்டால் அவன் பொய்யனாய் இருக்கிறான் (மாற்கு 1:17)**

---

38-ம் பக்க தொடர்ச்சி

நீங்கள் செய்துகொண்டிருந்த வேலையை மீண்டும் தொடர்வது அவ்வளவு எளிதல்ல. இரண்டாவது உங்கள் நண்பர்கள் பல காரியங்களைக் குறித்துப் பேசி உங்கள் வேலையிலிருந்து உங்கள் திசை திருப்பலாம். அதற்கு பல எளிய வழி; உங்கள் படிப்பு நேரத்தில் உங்கள் கைபேசிகளை (Cellphones) அணைத்து வைப்பதாகும்.

**9. படிக்கும் வேலையில் சிரமப்படும் மற்றொரு மாணவனைத் துணைக்கு அழைத்துச்செல்லுங்கள்:**

தனி மனிதனாய் செய்வதைவிட இரண்டுபேர் சேர்ந்து ஒரு வேலையை செய்வது சிறப்பாய் இருக்கும். "Two heads may be better than one"

**10. வாரத்தின் இறுதியில் பள்ளி வேலையைத் திருப்பிப்பாருங்கள்:**

ஆம், வார இறுதி நாட்களில் மகிழ்திருக்க வேண்டிய நேரம் தான் (Fun time) ஆனால் செய்த வேலையைத் திரும்பிப் பார்ப்பதற்கும் அதுவே நேரம். அப்படி செய்வது திங்கட்கிழமை காலை அடுத்த கல்வி வாரத்தை உற்சாகமாகத் தொடங்க உங்களை ஆயத்தப்படுத்தும்.

அந்த பத்து படிக்கும் பழக்கங்கள் (10 Study habits) உங்கள் கல்வியை முடிக்குவரை உங்களுக்கு உதவும். அவை உங்கள் படிக்கும் பழக்கங்கள் ஆகிவிட்டனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## வெற்றிகரமான மாணவர்களின் 10 படிக்கும் பழக்கங்கள்



புதிய கல்வியாண்டு தொடங்கியுள்ளது. வெற்றிபெறும் மாணவர்கள் நல்ல படிக்கும் பழக்கங்களைக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு படிக்கும் பழக்கங்களையும் வாசியுங்கள். நீங்கள் இதுவரை கடைபிடிக்காத, படிக்கும் பழக்கங்களை வளர்த்துக்கொள்ளுங்கள்.

1. **ஒரே நேரத்தில் நிறைய படிக்க முயற்சிக்காதீர்கள் :**
   ஒரே நேரத்தில் நிறைய படிக்க முயற்சித் தீர்களானால், நீங்கள் களைப்படைவதோடு, நீங்கள் படிப்பது மிகுந்த பலனையும் தராது. நீங்கள் செய்ய வேண்டிய வேலையின் நேரத்தை சிறு பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளுங்கள். சிறு இடைவேளைகள் உங்கள் மன பலத்தைப் புதுப்பிக்கும்.

2. **படிப்பதற்கு குறிப்பிட்ட நேரங்களைத் திட்டமிடுங்கள் :**
   படிக்கும் நேரம் என்பது பள்ளி வேலை சம்பந்தமாக நீங்கள் செய்யும் ஏதோ ஒரு வேலையைக் குறிக்கும். அது வாசிக்கக்கூடிய வேலையாகவோ, காகிதங்களில் எழுதவேண்டிய எழுத்து வேலையோ அல்லது ஒரு தேர்வுக்காகப் படிக்கக் கூடியதாகவோ இருக்கலாம். வாரம் முழுவதும் நீங்கள் படிப்பதற்காக தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தைத் திட்டமிடுங்கள்.

3. **ஒவ்வொரு நாளும் அதே குறிப்பிட்ட நேரத்தில் படிக்க முயற்சிக்காதீர்கள்:**
   ஒவ்வொரு நாளும் அதே குறிப்பிட்ட நேரத்தில் படிப்பது உங்கள் வாழ்க்கையில் தொடர்ந்து செய்யும் சாப்பிடுவது, தூங்குவது போன்ற ஒரு அங்கமாக மாறுகிறது. நீங்கள் படிப்பதற்கு குறிப்பிட்ட அந்த நேரம் வரும்போது, படிப்பதற்கு உங்கள் மனம் தயார் நிலையை அடைகிறது.

4. **நீங்கள் படிக்கும் நேரத்தில் தெளிவான இலக்குகளை நிர்ணயுங்கள் :**
   நீங்கள் முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்ளவும், உங்கள் முன்னேற்றத்தை அளக்கவும், இலக்குகள் உதவும். தற்செயலாக சாதாரணமாக படிப்பது பெரிய பலனைத் தராது. நீங்கள் படிக்கும் நேரத்தில் எதை அடைய (சாதிக்க) விரும்புகிறீர்கள் என்பது நினைவில் இருக்க வேண்டும்.

5. **திட்டமிட்டவுடன் படிக்க ஆரம்பியுங்கள் :**
   உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை நீங்கள் விரும்பாமலிருப்பதோ, அல்லது அது கடினமானது என்று நினைப்பதாலோ உங்கள் வேலையைத் தொடங்க நீங்கள் தாமதிக்கலாம். படிப்பதற்கு தாமதிப்பது நேரம் கொள்ளை போவதற்கு சமம். நீங்கள் எக்காரணத்தினாலோ தள்ளிப்போட்டால் நீங்கள் அனைத்தும் செய்து முடிக்க வேண்டிய நேரத்தில் செய்து முடிக்க இயலாமல்போகும். நீங்கள் வீணடித்த நேரத்தை ஈடுசெய்ய முயற்சித்து அதை அவசர அவசரமாக செய்யும்போது வேலையில் கவனக்குறைவும் , பிழைகளும் ஏற்படும்.

6. **கடினமான வேலைகளை முதலில் செய்யுங்கள் :**
   உங்களுடைய மிகக் கடினமான வேலையை செய்ய மிக அதிக முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். உங்கள் மிகக் கடினமாக வேலையை முதன்முதலாக அதாவது உங்கள் மனபலம் அதிகமாக இருக்கும்போது செய்யத் தொடங்குங்கள்.

7. **உங்கள் வேலையைத் தொடங்குமுன் உங்கள் குறிப்புகளை திரும்பப் பாருங்கள் :**
   உங்கள் குறிப்புகளைத் திரும்பப் பார்ப்பதால் உங்கள் வேலையைச் சரியாகச் செய்கிறீர்களா என்பதை உறுதிப்படுத்த முடியும். மேலும் உங்கள் வேலையை முழுமையாக முடிப்பதற்கு தேவையான செய்திகள் அக்குறிப்புகளில் இருக்கலாம்.

8. **படிக்கும் நேரங்களில் உங்கள் நண்பர்கள் உங்களை அழைக்காமலிருக்கச் சொல்லுங்கள்:**
   படிக்கும் நேரங்களில் உங்கள் நண்பர்கள் உங்களை அழைத்தால் இரண்டு பிரச்சனைகள் ஏற்படுகின்றன. முதலாவது உங்கள் வேலைக்கு இடையூறு ஏற்படுகிறது.

- தொடர்ச்சி 37-ம் பார்க்கவும்

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -5 (சரியான விடைகள்)

1. இரத்தமே (17:11)
2. தசமபாகம் எல்லாம் (27:30)
3. கூலிக்காரனுடைய கூலி (19:13)
4. பழுதுள்ள ஒன்றையும் செலுத்த வேண்டாம் (22:20)
5. பிள்ளையினுடைய நுனித்தோலின் மாம்சம் (12:3).
6. ஏழாம்நாள் (23:3).
7. கொழுப்பையாவது, இரத்தத்தையாவது நீங்கள் புசிக்கலாகாது (3:17).
8. ஏழாம்நாள் பத்தாம்தேதி (16:29,31).
9. பலிபீடத்தின்மேல் அக்கினி எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்க வேண்டும் (6:13).
10. யூபிலி வருஷம் (25:28).
11. பொய்யானையிட்டுச் சம்பாதித்த பொருளை (6:5).
12. நீ உன் சந்ததியில் யாரையாகிலும் மோளருக்கென்று தீக்கடக்கும்படி (18:21).
13. பாவநிவாரணபலியின் கொழுப்பை (16:25).
14. தகனிக்க வேண்டும்: இருப்பிடம் (4:35; 7:31) (அல்லது) தகனிக்க வேண்டாம் இருப்பிடம் (2:11).
15. நாதாப், அபியூ (10:1,2).
16. அஞ்சனம் பார்க்கிறவர்களை, குறிசொல்லுகிறவர்களை (19:31).
17. குஷ்டரோகம் ஒரு மனிதனுக்கு இருந்தால் (13:9).
18. ஆசாரியனாகிய ஆரானின் சந்ததியாரில் அங்கவீனமுள்ள ஒருவனும் (21:21).
19. எவனாகிலும் தன் தேவனைத் தூஷித்தால் (24:15).
20. உப்பினால் (2:13).
21. ஜீவனுக்கு (17:14)
22. செலோமித் (24:11).
23. உங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்ளாமலும், அடையாளமான எழுத்துக்களை உங்கள்மேல் குத்திக்கொள்ளாமலும் இருப்பீர்களாக (19:28).
24. இருபது கேரா (27:25).
25. நூறு, பதினாயிரம்பேரை (26:8).

---

## போட்டி எண் : 5 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**: அன்னாள்; E.கலா; ராணி பிளஸிங்; விஜி; கிரிஜா; மஞ்சு; கிறிஸ்டி; S.முத்துலெட்சுமி; பூங்கோதை ; பிரபா; ஜெயசிலின்; M.எஸ்தர்; இவாஞ்சலின்; J.சுமதி; கலைவாணி; சித்ரா பிளஸ்சி; குளோரி; K.சாராள்; முத்துகோபால் ; |**வடசேரி (மேலகமுங்கடி)** : T.கிறிஸ்டி ; |**ஸ்ரீவில்லிபுத்தூர்** : பாஞ்சாலி Tr; |**திருச்சி** : K.சாந்தி; |**திருநெல்வேலி**: சந்திரா ஆல்பர்ட்; |**நாகமலை**: T.விஜிலா; |**எடப்பாடி** : N.எப்சிபா; S.மாலதி

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-6
### எண்ணாகமம்
### இருப்பிடத்துடன் விடை எழுதவும் (பொருத்துக)

1. சாந்தகுணமுள்ளவன் - எலியாப்
2. வேறே ஆவியை உடையவன் - கெர்சோன்
3. ஆவியை பெற்றிருந்த புருஷன் - சேத்தூர்
4. பக்தி வைராக்கியம் காட்டியவன் - எல்தாத்
5. ஓர் மலையில் மரித்தவன் - எலெயாசார்
6. யோசேப்பின் குமாரன் - மோசே
7. ஆரோனின் குமாரன் - கோராகு
8. அம்மினதாபின் குமாரன் - தபேரா
9. சிப்போரின் குமாரன் - பாலாக்
10. பல்லூவின் குமாரன் - நோபாக்
11. இஸ்ரவேலின் மூத்த குமாரன் - யாவீர்
12. மிகாவேலின் குமாரன் - நகசோன்
13. ஆசானின் குமாரன் - மேரிபாவின் தண்ணீர்
14. இத்சேயாரின் குமாரன் - ரேபா
15. மனாசேயின் குமாரன் - யோசுவா
16. காதேசில் மரித்த ஒருத்தி - எப்பிராயீம்
17. செலொப்பியாத்தின் குமாரத்திகளில் ஒருத்தி - எஸ்கோல் பள்ளத்தாக்கு
18. லேவியின் குமாரரில் ஒருவன் - பினெகாஸ்
19. மீதியானியரின் ஐந்து ராஜாக்களில் ஒருவன் - கிப்ரோத் அத்தாவா
20. பாளயத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னவர்களில் ஒருவன் - காலேப்
21. இச்சித்த ஜனங்களை அடக்கம்பண்ணின இடம் - மில்காள்
22. வாக்குவாதம் பண்ணின இடம் - பல்த்தியேல்
23. கர்த்தருடைய அக்கினி பற்றியெரிந்த இடம் - ரூபன்
24. கிராமங்களைக் கட்டிக்கொண்ட இடம் - மிரியாம்
25. அறுத்த திராட்சக்குலையினிமித்தம் பெயரிடப்பட்ட இடம் - ஆரோன்

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.08.2024



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## SFC சீஷத்துவ பயிற்சி முகாம்கள்


















## திருச்சி தெற்கு, வடக்கு, மத்திய மண்டல ஒருங்கிணைந்த ஆண்கள் முகாம்





## திருச்சி மத்திய மண்டல பெண்கள் முகாம்









## மதுரை கிழக்கு மண்டல ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி





## மிஷனரி தரிசன முகாம்–கரூர் மண்டலம்





**BOOK POST**

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664